Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (11.10.2013) பக்கங்கள் 20 ஓசை – 011

08 ஓய்வு



10 புரட்சிப் பெண்



11 பால் எதற்கு?



# வடக்கு அமைச்சரவை இன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அமைச்சரவை உறுப்பினர்களும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவாகிய ஏனைய மாகாண சபை உறுப்பினர்களும் இன்று சத்தியப்பிரமாணம் செய்து உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கின்றனர்.

இந்த வைபவம் இன்று யாழ். நகரில் சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்று காலை 8.30மணியளவில் யாழ்.நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுத்தூபிக்கு முன்னால் அஞ்சலி நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து அமைதிப் பேரணி மூலம் தெரிவு செய்யப்பட்ட மாகாண உறுப்பினர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.

இப்பேரணி யாழ்வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும். அங்கு சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த மண்டபத்திலேயே சத்தியப்பிரமாண நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிலையில் இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறவுள்ளது என்றும் கூட்டமைப்பு நேற்று மாலை அறிவித்தது.

அதேவேளை, மேற்படி அமைச்சரவைத் தெரிவுக்கு கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பின் பேச்சாளரும். நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இன்றைய இந்த சத்தியப் பிரமாண நிகழ்வை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் சில பகிஷ்கரிக்கவுள்ளதாக நேற்று மாலை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி தவிர ஏனைய பங்காளிக் கட்சிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றுவது குறித்து நேற்று நள்ளிரவு வரை தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று தெரிய வந்தது.

## புதிய பிரதி அமைச்சர்கள் ஒன்பது பேர் நியமனம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேர் புதிய பிரதி அமைச்சர்களாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வு முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

தபால் சேவைகள் பிரதியமைச்சராக சனத் ஜயசூரியவும் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதியமைச்சராக லக்ஷ்மன் வசந்த பெரேரா பதவி பிரமாணம் செய்தனர்.

அவ்வாறே, தொழில் பிரதியமைச்சராக சரத் வீரசேகரவும், விவசாய பிரதியமைச்சராக வை.ஜீ.பத்மசிறியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதியமைச்சராக ஹேமால் குணசேகரவும், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி பிரதியமைச்சராக விக்டர் பெரேராவும் பிரதி கல்வியமைச்சராக மொஹான் லால் கிரேருவும், சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு பிரதியமைச்சராக

(19) ஆம் பக்கம் பார்க்க...

### ஐ.நா.சபையின் உப தவிசாளராக தனபால

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர தூதுக் குழுவின் ஆலோசகரான வருண ஸ்ரீ.தனபாலவை 68ஆவது அமர்வுக்கான இரண்டாவது குழுவின் உப தவிசாளராக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை தெரிவு செய்துள்ளது.

இரண்டாவது குழுவின் இந்தப் பதவிக்கு இவரது தெரிவை ஆசிய பசுபிக் குழு ஏகமனதாக அங்கீகரித்தது என அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## அமைச்சர்கள் தெரிவை நிராகரிக்கிறார் சுரேஷ்

### மாவைக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சரவைத் தெரிவையும், நியமனத்தையும் முற்றாக நிராகரிப்பதாகக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அமைச்சரவை நியமனம் தொடர்பாக கூட்டமைப்பின் பேரில் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை பொய்யானது. அது வெறுமனே தமிழரசுக் கட்சியினது அமைச்சரவையாக இருக்கலாம் எனவும் நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

இன்று நடைபெறும் அமைச்சர்களின் பதவியேற்பு மற்றும்



சத்தியப்பிரமாண நிகழ்வுகளை தங்கள் கட்சி பகிஷ்கரிக்குமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் தமது கட்சி

(19) ஆம் பக்கம் பார்க்க...

## தெரிவு நடந்தது எப்படி? விளக்கம் சொல்கிறது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)





வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

மேற்படி உத்தியோகபூர்வ அறிவித்தல் செய்யும் நேற்றைய நிகழ்வின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் பங்குகொள்ளவில்லை. இந்த நிகழ்வை ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் முற்றாகப் புறக்கணித்தன. தனியே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் பிரசன்னமாயிருந்தனர். இந்த அமைச்சர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர் என்ற விடயத்தையும் கூட்டமைப்பினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டதன்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## தனியார் பஸ் சேவைகள் கிளிநொச்சியில் ஸ்தம்பிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முழங்காவில் வழிச்சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் நடத்துனர்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சேவை நடத்துனர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பினால் அவ்வழிக்கான தனியார் பஸ் சேவை பாதிப்படைந்துள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது,

தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து ஆகியன கிளிநொச்சி டிப்போவுக்கு முன்னால் ஒரே இடத்தினில் தரித்து நின்றே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

நேற்று காலை 8.00 மணிக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க...

விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்
5 ஆம் பக்கத்தில்..

## எதிர்க்கட்சித் தலைவராக கமலேந்திரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)



வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்)தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கந்தசாமி கமலேந்திரன் (கமல்) எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளி வந்தது.

## வடக்கில் சூறாவளி அபாயம் நீங்கியது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு ஏற்படவிருந்த சூறாவளி அபாயம் நீங்கியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் உருவான சூறாவளி மேலும் வலுவடைந்து வருகின்றது. ஆயினும் இந்தச் சூறாவளியில் இலங்கைக்கு நேரடித் தாக்கம் ஏற்படாது.

யாழ்ப்பாணத்திற்கு ஆயிரத்து 300 கீலோ மீற்றர் வடகிழக்கே உருவாகியுள்ள சூறாவளியானது இந்தியாவை நோக்கி நகர்கின்றது. வடக்கு வடமேல் மத்திய சப்பிரகமுவ, மேல், தென் மாகாணங்களின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## சி.டி.பி. வங்கியின் வாணி விழா

சி.டி.பி. வங்கியின் வாணி விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாவுக்கு பிரதம விருந்தினராக நல்லை ஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதம விருந்தினராக சி.டி.பி. வங்கி தலைமைக் காரியால பிரதிப் பொதுமுகாமையாளர் இ.கார்த்திக் அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வி.அரசகேசரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பட்டிமன்றம், நாடகம், இசைச்சொற்பொழிவு, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

# யாழ்.மாநகர சபையின் நுளம்பு கட்டுப்பாட்டு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை பகுதியில் நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் கடந்த 7 ஆம் திகதி முதல் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்று வருகின்றது.

யாழ்.மாநகரசபையின் கொழும்புத்துறை பொது சுகாதாரப்பரிசோதகர் பிரிவில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்பு பிரிவினர், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட குழுக்கள், தொண்டர்கள், ஏனைய பொது அமைப்புக்கள் என்பன இணைந்து வெற்றிகரமாக இச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்செயற்பாடுகளின் போது நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உடனுக்குடன் அழிக்கப்பட்டும், பிரச்சினையான இடங்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டும், வழக்குத்தாக்கல் செய்யப்பட்டும் வருகின்றது.

அத்துடன் நுளம்பு குடம்பிகள இனம் காணப்பட்ட இடங்கள், வடிகான்கள் என்பனவற்றிற்கு அபேற்கிறநியூல்ஸ் என்னும் இரசாயன பதார்த்தம் நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்கு தூவப்பட்டும் வருகின்றது.


இலையான்களை கட்டுப்படுத்தும் முகமாக அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு கிருமி நாசினியும் விசிறப்பட்டு வருகின்றது. அத்துடன் விசேட கழிவகற்றல் வாகனங்கள் மூலம் திண்மக்கழிவகற்றும் செயற்பாடும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதுடன், சிரமதான வேலைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கொழும்புத்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 3 பாடசாலைகள், 2 அரச நிறுவனங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது அவற்றில் நுளம்பு பெருகும் இடங்கள் இனம்காணப்படவில்லை.

வீடுகள், பொது இடங்கள், ஏனைய நிலையங்கள் மொத்தமாக 792 இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு 43 இடங்களில் உள்ள நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் உடன் அழிக்கப்பட்டும், 17 இடங்களில் நுளம்புக்குடம்பிகள் இனம்காணப்பட்டு அவை அழிக்கப்பட்டும் உள்ளதுடன் 2 நிலையங்களுக்கு எதிராக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

அரியாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 5 பாடசாலைகளில் ஒரு பாடசாலையில நுளம்பு பெருகும் இடம் காணப்பட்டு அவை அழிக்கப்பட்டும், 6 அரச திணைக்களங்களில் ஒரு இடத்தில் நுளம்பு பெருகும் இடம் காணப்பட்டு அவை அழிக்கப்பட்டும், வீடுகள், பொது இடங்கள், ஏனைய இடங்களில் 1234 இடங்கள் பரீட்சிக்கப்பட்டு நுளம்பு பெருகும் 128 இடங்கள் இனம் காணப்பட்டன.





மண்டைதீவில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் கடந்த புதன்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான தலைவர் ஜெகான் சப்பதி கோயனினால் வீடுகள் கையளிக்கப்பட்டபோது... (படங்கள்: பா.பார்த்தீபன்)

## கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து தேசிய விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசிய விருதுக்குரியவர்களை தேர்வு செய்வதற்காக நாடளாவிய ரீதியில நடாத்தும் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்க்ள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் 'ஷில்ப - 2013 கர்மாந்த' தேசிய கண்காட்சி விற்பனை நிகழ்வு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் டிசம்பர் 25 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகர்த்த கண்காட்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி மேற்படி விருதுகள் வழங்கப்படவுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கைத்ெழில் சார்ந்த சுய தொழில் முயற்சியாளர்கள் தேசிய விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

சிறிய, நடுத்தர கைத்தெழில் துறை மற்றும் சுய தொழில் முயற்சிகள் துறையில் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளர்களாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தங்க விருதுடன், ரூபா ஐம்பதாயிரம் பணப்பரிசும்வழங்கப்படும்.

15 கைத்தொழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறுவோருக்கு முறையே 30,000 ரூபா, 20,00 ரூபா, மற்றும் 10,000 ரூபா பணப்பரிசில்களும், வெள்ளி விருதுகளும் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெறுவோர்க்கு ரூபா 10 ஆயிரம் பணப்பரிசிலும், சான்றிதழும் வழங்கப்படும். விண்ணப்பங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## உதவிப்பணம் வழங்கல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு ஒக்ரோபர் மாத்திற்குரிய கொடுப்பனவு தத்தமது தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.சிவராசா கேட்டுள்ளார். (104)

## சிறந்த நிலையமாக தெரிவு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் மத்திய முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் யாழ்.மாவட்டத்தில் மிகச் சிறந்த முதியோர் பராமரிப்பு நிலையமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற அகில உலக முதியோர் தின விழாவில் அதன் தலைவர் க.தம்பாப்பிள்ளைக்கு பரிசுக் கேடயமும் சான்றிதழும் 10 ஆயிரம் ரூபா காசோலையும் வழங்கப்பட்டது. (104)

## பணம் திருட்டு; சந்தேக நபருக்கு பிணை

(மன்னார்)

மன்னார் விடத்ததீவுப் பகுதியில் உள்ள இத்தி திக்கண்டல் பிரதேசத்தில் பணம் திருடிய நபர் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

தமது நண்பரின் வீட்டில் தொலைக்காட்சி பார்க்கச் சென்றவேளை அங்கிருந்து 25,000 ரூபாவைத் திருடிச் சென்றதாக மேற்படி நபர் மீது மன்னார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (113)




பழைய நாணயங்கள் பழைய புத்தகங்கள் தேவை. தொடர்பு: 458, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (C/257)



சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2488 திகதி 08-10-2013

ஆங்கில எழுத்து: Q

வெற்றி எண்கள் 13 22 45 49

போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ.32,887,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 274943 | 20/- | 5,498,860/- |
| 2 இல | 19677 | 100/- | 1,967,700/- |
| 3 இல | 408 | 1,000/- | 408,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திலும் | 10879 | 40/- | 435,160/- |
| 2 இல + ஆங்கில எழுத்திலும் | 759 | 1,000/- | 759,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திலும் | 22 | 10,000/- | 220,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திலும் | - | 32,887,175/- | - |
| 1 இல + போனஸ் இல | 13105 | 100/- | 1,310,500/- |
| 2 இல + போனஸ் இல | 611 | 500/- | 305,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திலும் + போனஸ் இல | 533 | 200/- | 106,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திலும் + போனஸ் இல | 35 | 1,500/- | 52,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திலும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 320979 | | 12,663,820/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 33,637,125/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3109)



Sakthi Home Science Academy

Regd. No. VE/ BR/ REV/520

மகளிருக்கான குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 14.10.2013 அன்று ஆரம்பமாக இருக்கின்றன.

கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள், Fondant ஐசிங், Varieties of Cakes, Glass Painting, Crystal Work, Knitting, தையல், Cookery, Ect.

இப் பயிற்சிகளை பயில விரும்பும் மாணவிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Main Street, Atchuvely

T.P No : 021 - 300 8487

பிரதான வீதி, அச்சுவேலி (C/2572)

# மாணவர்களுக்கு வழிகாட்டியாக ஆசிரியர்களின் உன்னத செயற்பாடு

## மத்திய கல்லூரி அதிபர்



ஆசிரியர்கள் சமூகத்தினை வழிப்படுத்துகின்ற சிற்பிகளாக விளங்குகின்றார்கள். இத்தகைய ஆசிரியர்கள் தெய்வங்களாகப் போற்றப்படவேண்டியவர்களாக விளங்குகின்றார்கள். இத்தகைய ஆசிரியர்களினை கௌரவப்படுத்த வேண்டியது எமது மாணவ சமூகத்தின் பாரிய கடப்பாடாக விளங்குகின்றது என யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கல்லூரி அதிபர் எஸ்.கே எழில்வேந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது அந்நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் தின நிகழ்விலே ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினையிட்டு அவர்களை வாழ்த்திக் கௌரவப்படுத்த வேண்டிய தேவைப்பாடு எங்களிடம் காணப்படுகின்றது. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் சமூகத்தில் தெய்வங்களாக மதித்துப் போற்றப்பட வேண்டியவர்கள். அத்தகைய ஆசிரியர்கள் சமூகத்தின் பொறுப்புணர்வுடன் மற்றவர்கள் போற்றுகினறவர்களாக வாழ வேண்டும் இவ்வாறு மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்த ஆசிரியர்கள் காலத்தால் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களினை அவர்களின் சேவையின் உயர்வினை உணர்ந்து மதிப்பளித்து ஆசிரியர்களைப் போற்றவேண்டும். எங்களுடைய கல்லூரியினைப் பொறுத்தவரையில் சிறந்த சேவையினை வழங்கக்கூடிய சிறந்த ஆசிரிய ஆளணியினை கொணடுள்ளோம்.

பாடசாலை மீது கொண்ட பற்றுறுதியின் காரணமாகவும் மாணவரகளின் எதிர்கால வாழ்விற்கான கல்வியினை வழங்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பின் காரணமாகவும் தங்களுடைய முழுமையான வளத்தினையும் பயன்படுத்தி மாணவர்களுக்கு சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களினை எதிர்கால்த்திற்கு உரியவர்களாக ஆக்குகின்ற பொறுப்பு ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என்றார்.

# முத்திரைக்கு மண்ணெண்ணெய் எப்போது கிடைக்கும்?

## மக்கள் கேள்வி

வரணி வடக்குப் பிரதேசத்தில் மின்சார வசதிகளற்ற மற்றும் ஓலைக்குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு மண்ணெண்ணை முத்திரை வழங்கப்பட்டு கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் மண்ணெண்ணை வழங்கப்படவில்லை என பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் கூட்டுறவுச் சங்க கிளைகளில் மண்ணெண்ணை வந்துவிட்டதா என பயனாளிகள் கேட்பதைக் காணமுடிகிறது. ஆனால் சங்க முகாமையாளர் இன்னும் தமக்கு அதற்குரிய அனுமதி கிடைக்கவில்லை என பதிலளிப்பதாகவும் பணத்திற்கான மண்ணெண்ணை தேவையான அளவு பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பு இனியும் காலம் தாழ்த்தாது மண்ணெண்ணெய் முத்திரை வழங்கிய மக்களுக்கு மண்ணெண்ணை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (150)

## நவராத்திரி விழா

செலான் வங்கியின் நெல்லியடிக் கிளையில் நவராத்திரி விழா இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்களை கலந்து கொள்ளுமாறு வங்கிக் கிளையினர் தெரிவித்துள்ளனர். (18)

# சிறுவர் முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் சர்வதேசசிறுவர் , முதியோர்,மாற்றாற்றல் உடையோர் ,வெள்ளைப் பிரம்பு தினம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் கலந்து கொள்ள உள்ளார் .

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர தி. விஸ்வரூபன் ,கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் , சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் சி.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# போட்டி முடிவுகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

மு.நித்தியமலர் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), சி.நிருஷாங்கினி (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), செ.நிஷாளினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ஜெ.ஜெனுசியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), தி.மதுஷா (கிளிநொச்சி மத்திய கல்லூரி

இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில்நடைபெறவுள்ள அகில இலங்கை சைவப்புலவர் சங்க பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படுமென சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் தெரிவித்துள்ளார். (10)

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றல்

(கொடிகாமம்)

முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. புகையிரதப் பாதை அமைக்கும் பணி விரைவாக நடைபெற்றுவருவதனால் பாதுகாப்பு அரண் இருந்த பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெற்று வரும் வேளை ஏ9 வீதியில் செல்லும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு 10 நிமிடத்தின் பின்பே வாகனங்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன. மழை காலத்திற்கு முன்னர் புகையிரதப் பாதை அமைக்க வேண்டி இருப்பதனால் புகையிரதப் பாதைக்கு மிகவும் அருகில் உள்ள பாதுகாப்பு அரண்களில் நவீன இயந்திரங்கள் மூலம் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெறுகின்றது. (130)

## புலமைப்பரிசில் பெறுபேறு

கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் கே.அபினுகா-175, மோ.நித்தியா-170, தி.யதுஷா-159, சி.கிஷாந்-156, ரூ.தனோசன்-155, க.கரன்சி-154 ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 20 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட் டுறவுச் சங்கக்கிளை முகாமையாளர் பதவிக்கு பயிற்சியாளர்களை உள்வாங்குவதற்கான விணணப்பங்களை கோரியுள்ளது.

சங்க எல்லைக்குள் வசிக்கின்ற முழுநேர உழைக்கும் விருப்பமுடைய 18 வயது தொடக்கம் 40 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் ஆக்கக்குறைந்தது 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் ஒரு தொகை கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் இப்பதவிக்கு தகைமை பெறும் பட்சத்தில் இப்பதவி வழங்கப்படும். பதவி வழங்கப்படும் போது சங்கத்திற்கு ரொக்க, ஆதனப் பிணை செலுத்த வேண்டும்.

விணணப்பங்களை 20.10. 2013 இற்கு முன்னர் பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு நேரில் அல்லது தபாலில் அனுப்பிவைக்குமாறு சாவ கச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் கோரியுள்ளார்.(இ)

# யாழ்ப்பாணச் சந்தையில் தேசிக்காய்க்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சந்தைகளில் தேசிக்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் அதன் விலையும் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

தற்போது யாழ்குடாநாட்டு சந்தைகளில் தேசிக்காயினை காண்பது என்பது அரிதான ஒன்றாக காணப்படும் நிலையில் ஒன்றின் விலை 20 ரூபா தொடக்கம் 30 ரூபா வரை விற்பனை செய்வதனை அவதானிக்கமுடிகிறது.

மேலும் ஒரு கிலோ 250 ரூபாவிற்கு மேல் விற்பனையும் செய்யப்படுகிறது. இந்நிலையில் இஞ்சிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக வியாபாரிகளால் கூறப்படுகிறது. (15)






கைதடி அரச முதியோர் இல்லத்தின் முதியோர் தின 6 ஆம் நாள் நிகழ்வுகள் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இல்ல அத்தியட்சகர் உரையாற்றுவதையும் பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தைச் சேர்ந்த மருத்துவர் சிவசுப்பிரமணியம் ஆன்மீக உரையாற்றுவதையும் கலந்துகொண்ட முதியோர்களையும் காணலாம். (90)

முன்னேறும் சந்தர்ப்பங்கள் தாமாக வருவதில்லை அவை உருவாக்கப் படுகின்றன. - ஆரிஸன் ஸ்வெட்மார்டன்.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பொது வெளியில் பெண் நிலை?

தமிழகத்தில் திரைப்பட நடிகை ஒருவர் பொலிசாரிடம் அளித்திருக்கும் புகார் தற்போது அங்கு ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. "தான் கதாநாயகியாக நடித்திருக்கும் திரைப்படத்தில் தான் நடிக்க மறுத்த சில ஆட்சேபகரமான காட்சிகளில் தனக்குத் தெரியாமல் இன்னொரு உடலை நடிக்க வைத்து பயன்படுத்தியிருக்கிறார்கள்" என்பது அந்தப் புகார்.

அதாவது ஆபாசமான காட்சிகளில் நடிகை நடிக்க ஒப்புக்கொள்ளாததால் அவருக்குத் தெரியாமலேயே இன்னொரு பெண்ணின் உடலை அக்காட்சிகளில் நடிக்க வைத்து இணைத்துள்ளார் இயக்குநர் என்பதாக அறியப்படுகிறது. இந்த முறை, திரைப்படங்களில் பல காலமாகவே தொடர்வதுதான். இதை ஆட்சேபிப்பதின் மூலம் தனக்கு வரும் வாய்ப்புகள் பாதிக்கப்படலாம் என்பதால் பல நடிகைகள் மௌனமாக இதை விட்டுவிடுகிறார்கள் எனத் தோன்றுகிறது. வளர்ந்து வரும் இளம் நடிகை என்ற போதிலும் சுயமரியாதையுடன் இதை புகாராக பதிவு செய்துள்ளார் இந்த நடிகை.

ஒரு ஆண் நடிகருக்கு என்றால் திரைத்துறை அல்லாத பிரச்சினை என்றால் கூட கிளர்ந்தெழுந்துவிடும் சங்கங்களும் சமூகமும் இதைக் கண்டுகொள்ளாது. அல்லது நடிகை என்றால் இதற்கெல்லாம் தயாராகத்தானே வந்திருப்பார் என்று அலட்சியமாகப் பேசும். நடிகையும் சமூகத்தைச் சேர்ந்த தனி நபர்தான் என்று நம் பொதுப்புத்தி பார்ப்பதில்லை.

அதிலும் பெண்ணைத் தாயாக, தேவதையாக, சக்தியாக, தெய்வமாகப் போற்றுவோமே தவிர சகமனுசியாக ஏற்றுக்கொள்வதில்லை. ஆண்கள் ஒவ்வொருவரும் தம்மை மனப்பூர்வமாகக் கேட்டுப் பார்த்துக் கொண்டால் உண்மை விளங்கும். இது இப்போதும் ஆண்களின் உலகமாகத்தான் இருக்கிறது என பதை யாரும் மறுக்க முடியாது.

பல இழிவுகளை நாம் மூடிமறைத்து இவ்வாறு நிகழவில்லை என்று ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சமூகத்தில் பெண்களின் நிலைமை இதுவே. சமுதாயத்தில் இந்த அநீதி நடப்பதை உணர்ந்தும், அலட்சியப்படுத்தியபடியோ அல்லது பெரும்பாலும் நியாயப்படுத்தியபடியோ, அதை ஏற்றுக்கொள்ளாது செல்லும் மனப்போக்கே நமது பொது மனப்போக்காக உள்ளது.

பெண்ணின் இந்த நிலைமை குறித்து, பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான பூலென் தெ லா பார் (Poulain de la Barre) என்ற பிரெஞ்சுப் பெண்மணி சொன்னார்: "பெண்களைக் குறித்து ஆண்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்துமே நம்பகத்தன்மை அற்றவை. ஏனெனில் அங்கே நீதிபதி வழக்கறிஞர்கள், வாதி, பிரதிவாதிகள், சாட்சிகள் அனைவருமே ஆண்கள்."

உண்மையில், தொன்று தொட்டே பெண்களுக்காகச் சிந்திப்பதும், அவர்களுக்கான நியதிகளை வழங்குவதும் ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இதுவே நம் சிந்தையில் ஊறி, மனிதர்கள் சமமாகப் படைக்கப்படவில்லை என்பதையே ஏதோ ஒருவகையில் நாமெல்லோரும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பதாக இருக்கிறது.

இன்றைக்கு மெல்ல மெல்ல பௌதீக ரீதியாக பெண்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறதென்பது உண்மையாயினும், சிந்தனை இன்னும் மாறிவிடவில்லை. வருங்கால உலகம ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா? அப்படி வராமல், நாம் மனதில் சமநீதி கொண்ட மனிதர்கள் எனச் சொல்லிக்கொள்ள முடியாது.

– ஆசிரியர்

# சட்டவிரோத மதுபாவனை ஒழிப்பு; கிராமங்களில் விசேட செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மது பாவனையை ஒழிப்பதற்கு மதுவரித் திணைக்களம் நாடளாவிய ரீதியில் கிராம மட்டங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் கிராம அலுவலர் பிரிவு மற்றும் உள்ளூரில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு சட்டவிரோத மது பாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

போதைப் பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி, அனுமதி இல்லாமல் மதுபானங்களை எடுத்துச் செல்லல், விற்பனை செய்தல், மாணவர்களின் மது பாவனை, போதையூட்டும் பொருட்களைப் பயன்படுத்தல், சிறுவர்களைப் பயன்படுத்தி மதுபானங்களை எடுத்துச் செல்லல், பகிரங்கமாக புகைத்தல், சிறுவர்களுக்குச் சிகரட் மற்றும் மதுபானங்களை விற்பனை செய்தல், தரமற்ற மூலப் பொருள்களை உள்ளடக்கி சுருட்டுக்களைத் தயாரித்தல், சட்டவிரோதமான முறையில் சுருட்டுத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் சட்டவிரோத மது பாவனை என்ற வகையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத மதுபாவனையை ஒழிப்பதற்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மையங்களிலும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், விழிப்புணர்வு கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்துதல், சட்டவிரோத மது பாவனைகளால் ஏற்படும் தீமைகள் தொடர்பாக விளக்குதல், சுவரொட்டிகள். துண்டுப் பிரசுரங்களை வெளியிடல் போன்றவற்றை முன்னெடுத்து வருகின்றனர் .

மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் குறிப்பிட்ட இலக்கை தீர்மானித்து அந்த இலக்கை நிறைவு செய்யும் வகையில் சட்டவிரோத மது பாவனையை இல்லாமல் ஒழிப்பதற்கு உரிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ் . மாவட்டத்தில் மதுவரி திணைக்கள பிராந்திய அலுவலகங்களாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சங்கானை, மல்லாகம், சாவகச்சேரி ஆகிய ஐந்து பிராந்திய அலுவலகங்கள் செயற்படுகின்றன .

மேலும் மல்லாகம் மதுவரி பிராந்திய அலுவலக பிரிவில் 21 கிராமங்கள் சட்டவிரோத மதுபாவனை இல்லாத கிராமங்கள் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்டு அதுதொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# 25 வருடங்கள் சேவையாற்றிய 7 ஆசிரியர்கள் கௌரவிப்பு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஏழு சிரேஷ்ட நிலை ஆசிரியர்கள் 25 வருடசேவையைப் பூர்த்தி செய்துள்ளனர் .

இவ்வாறு 25 வருட சேவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காணும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் எம். தவயோகராசா தலைமையில் இடம்பெற்றது.

கொழும்பு ஹோட்டல் கலதாரியில் இடம் பெற்ற நிகழ்வில் பேராசிரியர் வலன்ரைன் டானியல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு 25 வருடம் சேவை செய்த சிரேஷ்ட நிலை ஆசிரியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார்.

இவ் விருதினை, அருமைநாயகம் டானியல் அதிசயதாசன் (ஆரம்பப் பாடசாலை மேற்பார்வையாளர்) பி.ஈ.டி பட்டம் பெற்ற இவர் கடந்த 1985ஆம் ஆண்டு முதல் இன்று வரை சேவை யாற்றி வருகின்றார். மறைந்த திருமதி டப்பேன் இந்திராணி கணேசன் - ஆங்கிலத்தில் பன்முகப் புலமை கொண்டவர். இவர் கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் கல்விப்பணியில் இணைந்து கொண்டவர்.

வண. டேவிட் எஸ்.சொலமன் கல்லூரி இணை அதிபர், 1987 ஆம் ஆண்டு முதல் கல்விப் பணியை ஆரம்பித்தவர் . பி.ஏ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி பட்டதாரி, 2012 ஆம் ஆண்டு முதல் சிரேஷ்ட இணை உப அதிபராகப் பதவி உயர்வு பெற்றார்.

செல்வி ஹன்னா அரியமணி தம்பிநாயகம் 1985 ஆம் ஆண்டு முதல் கல்விப்பணியை ஆரம்பித்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விசேட கல்[illegible] சான்றிதழ் பெற்றார்.

திருமதி. இந்திராணி ஜெயக்குமார் யாழ்ப்பாணக் கல்லூரியின் இளைப்பாறிய உபஅதிபர் கடந்த 1976 ஆம் ஆண்டு கல்விப் பணியை ஆரம்பித்தவர். பி.எஸ்.சி., எம்.ஏ. பட்டத்தின் பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

சிவசுப்பிரமணியம் இராசசேகரம் 1985 ஆம் ஆண்டு கல்விப் பணியை ஆரம்பித்தவர் . பி.ஏ. பட்டதாரி என்பதுடன் சிரேஷ்ட நூலகராகவும் பணியாற்றியவர்.

துரைச்சாமி கணேச மூர்த்தி கடந்த 1986 ஆம் ஆண்டு கல்விப் பணியை ஆரம்பித்தவர். பி.ஏ. பட்டதாரி பட்டப் படிப்பின் பின்னர் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர். சட்டக்கல்வியையும் மேற்கொண்டு வருகின்றார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் திவிநெகும திணைக்களத்திற்கு

## விரைவில் வர்த்தமானி அறிவித்தல்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் திவிநெகும திணைக்களத்திற்கு 30 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்களை திணைக்களத்தினுள் உள்ளீர்ப்பதற்காக விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் படவுள்ளதாகவும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி இணைப்பதிகாரி ஐ.எல். அலியார் தெரிவித்தார் .

திவிநெகும திட்டத்தின் மூலம் பாரிய மாற்றங்களை கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதன் நோக்கம் திறமையான அதிகாரிகளை இனங்கண்டு அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதும், பின்னடைவான வேலைத் திட்டங்களுடன் கடமையாற்றி வரும் அதிகாரிகள் திறம்படச் செயற்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதுமாகும்.

பிரிவில் கடமையாற்றி வரும் ஒவ்வொரு அதிகாரியும் தமது பிரிவின் அனைத்து நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்துபவராக இருக்க வேண்டும்.

வறுமை ஒழிப்பு நடவடிக்கையில் பிரிவிலுள்ள குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் வருமான மட்டத்திற்கு ஏற்ப வகைப்படுத்தி வருமான மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதற்காக சமுர்த்தி வங்கிகளில் பல மில்லியன் ரூபா பணம் சேமிப்பில் உள்ளது.

வருமான மட்டம் குறைந்த குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு அவர்களுக்கான தொழில் முயற்சிகளுக்கு சமுர்த்தி அதிகாரிகள் வழிகாட்ட வேண்டும்.

குறைந்தளவான வட்டி வீதத்துடன் சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி பயனாளிகள் செய்யும் தொழில்களுக்கு ஏற்ப 5 இலட்சம் ரூபா வரை கடன் வழங்க முடியும். மேலும் அவர்களுக்கான சந்தை வாய்ப்பு, பாதுகாப்பு, காப்புறுதி, வழிகாட்டல் போன்ற விடயங்களிலும் அதிகாரிகள் கவனம் செலுத்துதல் வேண்டும். எதிர்வரும் காலங்களில் சமுர்த்தித் திட்டம் 'திவிநெகும' எனும் ஒரு பாரிய திட்டமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கமைய பிரிவிலுள்ள அனைத்து குடும்பங்களும் இத்திட்டத்தின் பங்காளிகளாக உள்ளீர்க்கப்படவுள்ளனர் .

எனவே, அனைத்து அதிகாரிகளும் இதற்காக தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள் 51

**வே.அர்ச்சுணன்**

விடுதலைப் புலிகளின் முடிவை எழுதுவது தொடர்பில் ஏற்கனவே அமெரிக்காவும், இந்தியாவும் முடிவெடுத்திருந் தன. ஆனால் தமிழ் ஊடகங் கள் இவை தொடர்பில் சரியான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளா மல் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் கூட உசுப்பேற்றும் பாணியிலான செய்திகளையே வெளியிட்டு வந்தன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பத்திரிகையாகக் கூறிக்கொள்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பத்தி ரிகையே இவ்வாறு மிகைப் படுத்தப்பட்ட த்கவல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது. விடுதலைப் புலிகள் இறுதிக் கட்ட மூச்சை விட்டுக் கொண்டிருந்த அந்த முள்ளி வாய்க்கால் பகுதியில் நின்று போராடிக்கொண்டிருந்த போது குறித்த பத்திரிகை விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் ஒன்றை கடைசிக் கட்டத்தில் கொடுப்பார்கள் தலைவரிடம் அதற்குரிய திட்டங்கள் இருக்கிறது என்ற பாணியில் செய்திகளை வெளியிட்டு மக்களை தொடர்ந்தும் உசுப்பேற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் புலிகளின் முடிவை எழுது வது தொடர்பில் உறுதியாக இருந்த இந்தியாவும், அமெரிக்காவும் இலங்கை அரசுடன் கூட்டாக இணைந்து அவர்களை அழிக்கின்ற செயற்றிட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

குறிப்பாக அதாவது ஆரம்ப நாட்களில் விடுதலைப் புலிகளின் பலம் குறிப்பாக கடற்புலிகளின் வளர்ச்சியிலேயே தங்கியிருந்ததாக பல ஆய்வாளர்களும் மதிப்பீடு செய்திருந்தனர். கடற்புலிகளின் பலம் என்பது குறிப்பாக ஆயுத விநியோகம் வழங்கல்கள், கடற்படையுடனான மோதல்கள், கடற்படைக்குரிய விநி-யோக மார்க்கத்தை தடுத்தல் உள்ளிட்டவற்றில் செறிந்திருந்தது.

புலிகளின் போராற்றலைப் பலமாக்கும் விதத்தில் பல்வேறு பங்களிப்புகளை மேற்கொண்டு வந்த கடற்புலிகளின் பலத்தை அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசு அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடம் தனது கடற்படைப் பலத்தை பெருக்குவதற்கு உதவி கோரி நின்றது.

இந்த வேளையில் பாகிஸ்தான், இந்தியா, சீனா போன்ற நாடுகள் இலங்கைக் கடற்படைக்கு பல்வேறு வழிகளிலான உதவிகளை வழங்கி வந்த போதிலும் குறிப்பாகஅமெரிக்கா வின் உதவியே விடுதலைப் புலிகளை முழுமையாக அழிக்க இலங்கைக்கு உதவியது எனலாம். குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கான ஆயுத விநியோகத்தை சர்வதேச கடல் மார்க்கமாக எடுத்து வரும் பொழுது அதை உளவுபார்த்து இலங்கை அரசுக்கு உதவியமை, நவீன ராடர் வசதிகளை ரகசியமான முறையில் ஏற்படுத்திக் கொடுத்தமை, இராணுவ ரீதியிலான பயிற்சிகளை மற்றும் போர் உத்திகளை இலங்கைக் கடற்படைக்கு கற்றுக் கொடுத்தமை போன்ற வழிகளில் அந்த உதவிகள் அமைந் திருந்தன. தனது தொழில்நுட்ப வல் லமைகளின் ஊடாக குறிப்பாக சற்ற லைட்களின் உதவியோடு விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் இலங்கை அரசின் கடற்படையுடன் அமெரிக்கா வின் ஆசிய கடற்படை மையம் தக வல்களை பரிமாறிக் கொண்டமை உள் ளிட்ட பல்வேறு தகவல்கள் போரின் முடிவின் பின்பே தற்போது தொடர்ச்சி யாக கசிந்த வண்ணம் உள்ளது.

**விடுதலைப் புலிகள் இறுதிக் கட்ட மூச்சை விட்டுக்கொண்டிருந்த அந்த முள்ளிவாய்க்கால் பகுதியில் நின்று போராடிக்கொண்டிருந்த போது குறித்த பத்திரிகை விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் ஒன்றை கடைசிக் கட்டத்தில் கொடுப்பார்கள் தலைவரிடம் அதற்குரிய திட்டங்கள் இருக்கிறது என்ற பாணியில் செய்திகளை வெளியிட்டு மக்களை தொடர்ந்தும் உசுப்பேற்றிக் கொண்டிருந்தது.**

விளங்கிவந்தனர்.

ஆனால் இலங்கையில் விடுதலை இயக்கங்கள் தொடர்ச்சியாக ஒன்றன் பின் ஒன்றாக தோற்றம் பெறத் தொடங்கியதைத் தொடர்ந்து கடற்படைக்கு பெரும் நெருக்கடிகள் அதிகரிக்கத் தொடங்கியதுடன் கடற்கடையின் தேவையும் பெரியள வில் உணரப்பட்டது. இந்த நிலை யில் ஏனைய இயக்கங்கள் அனைத்தும் இல்லாமல் செய்யப்பட்ட சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தனி இயக்கமாக வளர்ச்சி கண்டு வந்தது. குறிப்பாக விடுதலைப் புலிகளால் கடற்புலிகள் அணி. என்ற பெயரில் ஒரு கடற்படைப் பலம் உருவாக்கப்பட்டது.

அரசின் பல கடற்படைக் கப்பல்கள் விடுதலைப் புலிகளால் யுத்த காலத்தின் போது அழித்தொழிக் கப்பட்டதுடன் குறிப்பாக 1990 தொடக் கம் 2007ஆம் ஆண்டு காலப்பகுதி வரை விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் ஆதிக்கமே கடலில் காணப்பட்டது எனலாம். விடுதலைப் புலிகள் இந்தியா சென்று ஆயுத பொருட் கொள்வனவில் இக்காலப் பகுதிகளில் ஈடுபட்ட பொழுது இதனை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று எண்ணிய இலங்கைக் கடற்படை உருவாக்கப்பட்ட ஒரு கிளையே Patrolmen எனப்படும் பிரிவாகும். இந்தக் கிளை உறுப்பினர்கள் கடற்படை, தரைப்படை என இரு அணிகளிலும் செயற்படுகின்றனர். ஆரம்பத்தில் துறை முகப் பாதுகாப்பு என்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இப்படை உருவாகியிருந்தாலும் சமீபத்திய ஆண்டுகளில் கடற்படை Patrolmen காலாட்படை மற்றும் ஒளி கவச அலகுகள் ஆகிய இரண்டிலும் சுதந்திரமாக இராணுவத்துடன்

குறிப்பாக இலங்கையின் கடற்படை 1937 இல் இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து றோயல் கடற்படையாக மாற்றம் அடைந்து 1972இல் இலங்கை கடற்படையாக தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் இலங்கைக் கடற்படையைப் பொறுத்த வரையில் பெரிய சவால்கள் என்று எதுவுமே இருக்கவில்லை. குறிப்பாக கடத்தல்காரர்களின் தொல்லை மட்டுமே இலங்கைக் கடற்படைக்கு சவால் மிகுந்த விடயமாக இருந்தது. அதுவும் குறிப்பாக வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, சுண்டிக்குளம், தீவகம் உள்ளிட்ட சில பகுதிகளில் மட்டுமே கடத்தல்காரர்களின் நடமாட்டமும் அவர்களின் தொல்லைகளும் கடற்படைக்கு இருந்தன. அதாவது இலங்கையில் இருந்து வாசனைத் திரவியங்களை இந்தியாவிற்கு கடத்திய கடத்தல் காரர்கள் இந்தியாவில் இருந்து வேறு பொருட்களை இலங்கைக்கு கடத்தி வந்தனர். இதன்போது பொலி சாரையும், கடற்படையினரையும் சில இடங்களில் அல்லது சில சந்தர்ப்பங்களில் இலஞ்சம் கொடுத்தும் சமாளித்தும் வந்தனர். கடத்தலுக்கு பெயர்போனவர்களாக வல்வெட்டித்துறை மீனவர்களே சீனா, இந்தியா, இஸ்ரேல் உட்பட பல நாடுகளிடமும் ஓடிச்சென்று உதவி கோரியது. இந்த நிலையில் பல நாடுகளும் இலங்கைக்கு உதவிக்கொண்டிருந்தன. குறிப்பாக இறுதிக் காலகட்டத்தில் அதாவது 2006ஆம் ஆண்டிற்குப் பின்னர் நீரிலும் நிலத்திலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வல்ல துப்பாக்கிப் படகுகளை சீனா இலங்கைக்கு வழங்கிக் கொண்டிருந்தது. இதில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடற்புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கு இலங்கைக் கடற்படைக்கு உதவிய வகையில் வேகமாக தாக்குதல் நடத்தும் FAC படகுகள் பிரதானமாக இருந்தன. அடுத்து கரையோரப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறிய ரகப் படகுகள் 2006 இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தப் படகுகள் இலங்கைக் கடற்படைப்பிரிவில் ரெபிட் அதிரடிப் படகுப் படையில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இப்படிப் பல வகையான கப்பல்கள் இலங்கைக் கடற்படையிடம் காணப்படுகின்றன.

கடற்படையின் போர் திறன்களை அதிகரிக்க அண்மையில் இணைந்து புலிகளுக்கு எதிரான தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

இருந்த போதிலும் இலங்கைக் கடற்படை தொடர்பான மதிப்பீட்டில், அரசாங்கம் எதிர்பார்த்த அளவிற்கு இலங்கைக் கடற்படை வெற்றிகளை குவிக்கவில்லை என்ற கவலை ஆரம்பத்தில் அரசாங்கத்திடம் காணப்பட்டது. குறிப்பாக விடுதலைப் புலிகளை குறுகிய காலப்பகுதியில் விரைவாக வெற்றி கொள்ள வேண்டும் விரைவான தரை இறக்கங்களை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் எவையுமே நீண்டகாலம் ஈடேறவில்லை. ஆட்சிப் பொறுப்பை மகிந்த ராஜபக்ஷ கையில் எடுத்தவுடன் பாதுகாப்புத் துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தி அதன் ஊடாக இலங்கைக் கடற்படையையும் வலுவானதாக கட்டியெழுப்பியதுடன் அமெரிக்காவின் உதவியையும் பெற்று விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் அளவுக்கு படையைக் கட்டியெழுப்பினார்.

இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட இலங்கைக் கடற்படை சந்தித்த சவால்கள் அதனை தமிழ் ஊடகங்கள் ஏளனம் செய்தமை உள்ளிட்ட பல வரலாறுகள் தொடர்ந்து பார்க்கப்பட வேண்டியவையே. அந்த வகையில் இலங்கை கடற்படையின் நிர்வாகத் திறன் உள்ளிட்ட சில விடயங்களை மேலோட்டமாக பார்த்தவாறு விடு தலைப் புலிகளை கடற்படையினர் எவ்வாறு அழித்தனர் இதற்குத் தமிழ் ஊடகங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்தன என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

**குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடற்புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கு இலங்கைக் கடற்படைக்கு உதவிய வகையில் வேகமாக தாக்குதல் நடத்தும் FAC படகுகள் பிரதானமாக இருந்தன. அடுத்து கரையோரப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறிய ரகப் படகுகள் 2006 இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தப் படகுகள் இலங்கைக் கடற்படைப்பிரிவில் ரெபிட் அதிரடிப் படகுப் படையில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இப்படிப் பல வகையான கப்பல்கள் இலங்கைக் கடற்படையிடம் காணப்படுகின்றன.**



(தொடரும்)



# கொமன் வெல்த்தில் பங்கேற்பது பிரச்சினைகளை எழுப்பவே

## என்கிறார் கமரூன்

(லண்டன்)

மனித உரிமைப் பிரச்சினைகளை எழுப்புவதற்காகவே இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள கொமன் வெல்த் மாநாட்டில் தாம் பங்கேற்கவுள்ளதாக, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், கொழும்பில் நடக்கும் கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று மனிதஉரிமை அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ள போதிலும், நான் அந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளேன்.

ஏனென்றால், அப்போது தான், அந்தப் பிரச்சினைகளை எழுப்ப முடியும். கொமன்வெல்த் மாநாட்டில், இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்த கவலைகளை நிச்சயம் எழுப்புவேன். பிரித்தானியப் பிரதமர் கொமன்வெல்த் மாநாட்டுக்குச் செல்வது சரியானதே என்று நான் நினைக்கிறேன்.

ஏனென்றால் நாம் கொமன் வெல்த் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். சிக்கலான பிரச்சினைகளை எழுப்புவதற்கு பிரித்தானியா ஒருபோதும் பின் வாங்காது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த எமது நிலை தெளிவானது. அதிலிருந்து பின்வாங்க முடியாது. ஏனென்றால் இலங்கையின் மனித உரிமைகள் நிலை மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார.

# பக்கச் சார்பாக நடக்கும் பொதுநலவாய செயலர்

## பாய்கிறது கனடா

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா பக்கச்சார்பாக செயற்படுகின்றார் என கனடா குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக கனடா குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்காது இலங்கை அரசாங்கத்தை கமலேஷ் சர்மா, காப்பாற்றி வருவதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கனேடிய பிரதிநிதி ஹக் சேகல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சகல பிழைகளையும் சர்மா நியாயப்படுத்தி வருவதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக காட்டியுள்ளார். இலங்கையில் அமர்வுகள் நடத்தப்படாமல் இருந்தால் உறுப்பு நாடுகள் இலங்கையின் உறுப்புரிமையை சில காலங்களுக்கு முன்னதாகவே இரத்துச் செய்திருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்ட வெள்ளைப் பிரம்பு கொடி



எதிர்வரும் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு, வெள்ளைப் பிரம்பு கொடி விற்பனை வாரத்தின் முதலாவது தினமான கடந்த 8 ஆம் திகதி முதலாவது கொடி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்பட்டது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விழிப்புலனற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சுகத் வசந்த சில்வா முதலாவது கொடியை ஜனாதிபதிக்கு அணிவித்தார். ஜனாதிபதி அச்சங்கத்துக்கு ஒரு தொகை நிதியை கையளித்தார்.

வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத்தினத்தின் அடையாள வெள்ளைப்பிரம்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, குறித்த அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமாரன் ஆகியோருடன் இலங்கை விழிப்புலனற்ற பட்டதாரிகள் சங்க அங்கத்தவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு, இலங்கை விழிப்புலனற்றோர் பட்டதாரிகள் சங்கம் நாடு முழுவதும் வெள்ளைப் பிரம்பு கொடி விற்பனையை ஏற்பாடு செய்துள்ளது.

# குளோரின் நீர்க்குழாய் வெடித்து 300 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அவிசாவளை பிரதேசத்தில் குளோரின் நீர்க்குழாய் ஒன்று வெடித்ததில் 300 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் குளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட வாயுக் கசிவே இதற்கான காரணமாகும்.

நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றியவர்கள் உள்ளிட்ட 300 பேர் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சுவாசப் பிரச்சினைகளை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பென்ட்ரீக் தோட்ட லயன்களில் வாழ்ந்து வரும் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பியூலன்ஸ்கள் மற்றும் ஏனைய தனியார் வாகனங்களில் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

68 கிலோ கிராம் எடையுடைய சிலிண்டர் ஒன்றில் இவ்வாறு வாயு கசிவடைந்துள்ளது.

சிறுவர்களும், வயது முதிர்நத வர்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக குழுமியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

# ரணில், பிரபாவின் கதியே ஹக்கீமிற்கும் ஏற்படும்

## எச்சரிக்கிறார் விமல்



(கொழும்பு)

ரணில் மற்றும் பிரபாகரனுக்கு ஏற்பட்ட தலைவிதியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும் ஏற்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான வீரவன்ஸ வெளியிட்டுளள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுளளது.

13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கபபட்டுள்ள அதிகாரங்களை விட அதிகளவான அதிகாரங்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குரஷித்திடம் நீதியமைச்சர் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் மாகாண சபைகள் தொடர்பில் இதே நிலைப்பாடுகளையே கொண்டுள்ளது. இதில் ஒரே வித்தியாசம் முஸலிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் இருந்து கொண்டு இநத நிலைப்பாட்டை கொண்டுளளதுடன் கூட்டமைப்பு அரசுக்கு வெளியில் இருந்து அந்த நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை கைப்பற்றவே முஸ்லிம் காங்கிரஸ் இந்த சந்தர்ப்பத்தில் முயற்சித்து வருகிறது.

மக்களின் அதிகாரத்தில் நம்பிக்கை வைக்காது சர்வ தேச சக்திகள் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட மற்றும் தோல்வியடைந்த இரண்டு அரசியல் தலைவர்கள் நினைவுக்கு வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன். அவர்கள் மக்கள் அதிகாரத்தின் மீது நம்பிகை வைத்து செயற்படவில்லை. சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக் கையில் அவரது ஈழநாடு என்ற கனவு கட்டியெழுப்பப் பட்டிருநதது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, மேற்குலக சக்திகளின் அழுத்தங்களின் அடிபபடையில் நாடு பயணம் செய்யும் பாதையை மாற்ற முடியும் என்று எண்ணினார்.

மேற்குலக சக்திகளின் அழுத தங்களின் அடிப்படையல் நாட்டின் பயணத்தை மாற்ற முடியும் என்று நம்பிய வேலுப்பிள்ளை பிரபாகரன் தோல்வியடைந்ததுடன் ரணில் விக்ரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குச் சீட்டுகள் கண்டெடுப்பு முடிவிற்கு வந்தது வழக்கு

(கொழும்பு)

புத்தளம் புனித அன்ரூஸ் கல்லூரியில் வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கினை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என புத்தளம் நீதவானும், மாவட்ட நீதிபதியுமான ரங்க திசாநாயக்க நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தம்மால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது குற்றங்களோ, முறைகேடுகளோ அல்லது மோசடிகளோ இடம்பெறவில்லை எனத் தெரியவந்துள்ளதாக நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

இதற்கமைய இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ள புத்தளம் நீதவான், அந்த வாக்குச் சீட்டுகள் அடங்கியுள்ள பெட்டிகளை தேர்தல்கள் செயலகத்திற்கு பொறுப்பளிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சில அரசியல் கட்சிகள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத் தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனக் குறிப்பிட்ட புத்தளம் நீதவான், திணைக்கள மட்டத்திலேயே அதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

# கனடா நிதியுதவி மீள் பரிசீலனை உடனடிப் பாதிப்பை ஏற்படுத்தாது

## பொதுநலவாயம் தெரிவிப்பு

கொமன்வெல்த் அமைப்பிற்கான நிதியுதவியை கனேடிய அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய எடுத்த முடிவானது உடனடிப் பாதிப்பை ஏற்படுத்த மாட்டாதென கொமன்வெல்த் வர்த்தக சபையின் தலைவர் மொகான் கௌல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கனேடிய அரசியல்வாதிகள் எடுக்கும் ஒருசில திடீர் முடிவுகளால், கொமன்வெல்த் அமைப்பின் வரவு-செலவுத்திட்டமோ அல்லது இலங்கையின் பொருளாதாரமோ எந்த வகையிலும் பாதிப்படையாது.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான நிதி ஏற்கனவே தயார். நிலையில் வைக்கப்பட்டிருப்பதனால், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அதனைப் பாதிக்காது என்றும் கூறியுள்ளார்.

# ஆயுர்வேத ஆய்வுதிட்டத்திற்கு முன்மொழிவுகள் ஏற்கப்படும்

## -ஆணையாளர் அறிவிப்பு-



தேசிய ஆயுர்வேத ஆய்வுத் திட்டம் தொடர்பாக விசேட நிபுணத்துவம் பெற்ற பாரம்பரிய வைத்தியர்கள் ஆய்வு முன்மொழிவுகளை தமது பெயர் விபரங்களுடன் ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகள் ஊடாக உடன் அனுப்பி வைக்குமாறு சுதேச மருத்துவத் திணைக்கள வடமாகாண ஆணையாளர் டாக்டர் . திருமதி . சி . துரை ரட்ணம் அறிவித்துள்ளார் .

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் மகிந்த சிந்தனைக்கு அமை வாக , சுதேச மருத்துவ ஆய்வு களை ஊக்குவித்து தேசிய சுகா தாரம் சார்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திட்டம் ஒன்று சுதேச வைத்திய அமைச்சினால் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்ட த்தின் கீழ் நீரிழிவு , குருதிச் சுற்றோட்டம் தொடர்பான நோய் கள் , சிறுநீரக நோய்கள் , டெங்கு , புற்றுநோய் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன .

மேலும் இவ் ஆய்வுகள் தொட ர்பில் தேசிய ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் ஆற்றலும் ஆர்வமும் உள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சகல மட்டங்களிலும் உள்வாங் கப்பட வேண்டும் என்பதும் பரம்பரை வைத்தியர்களின் திற மைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என வும் கடந்த முதலாம் திகதி நடை பெற்ற வேலைப்பட்டறையில் தீர்மானிக்கப்பட்டது.



கரணவாய் தெற்கு மேற்கு மற்றும் மத்தி, இமையாணன் ஆகிய கிராமங்களில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்களால் டெங்கு ஒழிப்பு செயற்பாடு மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். (18)

# தையல்பயிற்சிநெறி

(கொடிகாமம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட யுவதிகளிற்கு தையல் பயிற்சி சம்பந்தமான வகுப்பு பிரதேச செயலகத்தின் பின்னாலுள்ள வளாகத்தில் நடைபெற்றுவரு கின்றது.

இப்பயிற்சி வகுப்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 50இற்கும் மேற்பட்ட யுவதிகள் கலந்து பயிற்சி நெறியில் பங்குபற்று கின்றனர். இப்பயிற்சி நெறி யானது பத்து நாட்களை கொண் டது. இப்பயிற்சி இன்றுடன் நிறைவு பெறுவதுடன் அன்றைய தினம் பயிற்சியினை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

# வண்ணார் பண்ணை பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலை யில் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வண்ணார் பண்ணைக் கிளினிக்கிலும் நாச்சிமார் கோவில பகுதியிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன. இந்த செயற்பாடு பொது சுகாதார ப்ரிசோதகர் எஸ். முகுந்தன் தலைமையில் நடை பெறவுள்ளதுடன் இந்தச் செயற்பாட்டில் கிராம அலுவ லர்கள் சமுர்த்தி உத்தியோக த்தர்கள் யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி வெளிக்கள உத்தியோக த்தர்கள் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து செயற்படவுள்ளனர்.

இதற்கு பொதுமக்கள் பொது அமைப்புக்கள்,அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் கிராம மட்டக்குழுக்கள் ஆகியவற்றை ஒத்துழைப்பை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லொழுக்க நிறுவனத்தினால் கோட்டமட்டப்போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறு வனத்தின் கவிதை,கட்டுரை,பேச்சுப், போட்டிகள் கோட்ட ரீதியாக நடத் தப்படவுள்ளன.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி செவ் வாய்க்கிழமை 2 மணிக்கு பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத் தில் நடைபெறும்.

கரவெட்டி கோட்டத்திற்குட் பட்ட பாடசாலைகளுக்கான போட் டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

மருதங்கேணி கோட்ட பாட சாலைகளுக்கான போட்டிகள் 21ஆம் திகதி திங்கட்கிழமை பிற் பகல் 2 மணிக்கு குடத்தனை அரசினர் தமிழ்க கலவன பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல போட்டியாளர்களையும் குறித்த நேரத்திற்கு அனுப்பி வைக்கு மாறு நிறுவனச் செயலாளர் ஆ.குலநாதன் கேட்டுள்ளார். (109)

# ஆயுர்வேத வைத்தியசாலையை இயங்க வைக்குமாறு கோரிக்கை

ஆயுர்வேத வைத்திய சாலை இயங்காததால் பலரும் சுதேச மருந்துகளை பெற்றுக்கொள் வதில் பல சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்படு கிறது.

வலி.கிழக்கு பிரதேச சபை யின் நிர்வகிப்புக்குள் காணப் பட்ட இவ் ஆயுர்வேத வைத்திய சாலை கட்டடம் தற்போது கவனிப்பாரற்று பற்றைகள் வளர் ந்து காணப்படுவதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

உரும்பிராய் இலங்கை வங் கிக்கு அருகில் காணப்படும் வலி.கிழக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கட்டடத்திலேயே அண்மைக்காலமாக வைத்திய சாலை இயங்கிவந்தது. தற்போது கடந்த ஒரு வருடமாக இவ் ஆயுர் வேத வைத்தியசாலை இயங்கு வதில்லை என பலராலும் கூறப்ப டுகிறது.

ஆளணிப்பற்றாக்குறையை காரணம் காட்டி இவ் வைத்திய சாலை இயங்குவதில்லை என பிரதேச சபை உறுப்பினர் ஒரு வர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வலி கிழக்கு பிரதேச சபைத் தலை வரை தொடர்பு கொண்டு கேட்ட போது. ஆளணிப்பற்றாக்குறை என்பது தொடர்ந்தும் காணப்படு வதாகவும் அப்படியிருந்தும் மக்க ளின் கோரிக்கைக்கு அமைய கடந்த மாதம் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இக்கட்டடத்தினை மீளவும் செயற்படுத்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது நீர்வேலியில் கடமை யாற்றும் வைத்தியரை சுழற்சி அடிப்படையில் கிழமைக்கு இரண்டு தடவை வைத்திய நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு ள்ளதாகவும், வெகுவிரைவில் இக்கட்டடம் மீளவும் இம்மாத நடுப்பகுதியில் இயங்கும் எனவும் உறுதியளித்தார். (15)

# சேவைக்கட்டண விபரம் அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தின் நாலு சில்லு உழவு இயந்திர சேவைக்கட்டண விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒருபரப்பு நெற்காணிக்கு ரில்லர் உழவுக்கு 90 ரூபாவும் டிஸ் வெட்ட 120 ரூபாவும் தோட்ட வீலர் உழவுக்கு 120 ரூபாவும் அறவிடப்படு கின்றது.

அத்துடன் ஒருபரப்பு மேட்டுக் காணிக்கு ரில்லர் உழ வுக்கு 120ரூபாவும்,டிஸ் வெட்ட 170 ரூபாவும், தோட்டவீலர் உழ வுக்கு 170 ரூபாவும் அறிவிடப் பட்டு வருவதாக சாவகச்சேரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ)

# முரசின் இன்றைய பலன்



(11.10.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் புரட்டாதி மாதம் 25 ஆம் திகதி.சரஸ்வதி பூஜை ஆரம்பம்
மூலநட்சத்திரம் மு.ப 11.12 வரை பின்பூராடம், சப்தமி-திதி ,
இராகுகாலம 10.32- 12.02 வரை. சுபநேரம 06.02- 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** துன்ப துயரங்களுக்குக் காரணம் பொருத்த மில்லாத மனை என கவலையுறல்,விற்பனை செய் யும் பொருட்டு மனைக்கு வருவோர் பற்றி எச்சரிக்கை நன்று, கெட்ட கனவு கண்டு உளம் பதகளிப்படைதல்.

**ரிஷபம்** நோயின் உபாதையினால் ஒய்வு பெற சிந்தித்தல், கடன் தொல்லையால் பூர்வீக சொத்தினை விற்கும் அவலநிலை ஏற்படல். இழுப்பட்ட திருமண முயற்சி கைகூ டும் நிலையால் மகிழ்வு.

**மிதுனம்** பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கி விடல், தாரத்தின் சொல்லைக்கேட்காது உதவப்போய் ஆபத்தில் சிக்கிக்கொள்ளல்.

**கடகம்** நீண்டநாள் கடன்பணம் வந்துசேரும் அறிகுறி தென்படல், இலஞ்சம் கொடுத்தென்றாலும் காரியம் சாதிக்க முற்படல்.

**சிம்மம்** இயந்திரக்கோளாறினால் உரிய நேரத்திற்கு சமுக மளிக்காமை. மனைவியுடன் ஏற்பட்டிருந்த முறுகல் சமரசமடைதல்.

**கன்னி** பதவி மோகத்தால் கேடு செய்ய முயற்சித்தல், வெளிநாட்டைக் கைவிட்டு பெற்றோரைப் பராமரிக் தாயகம் வருதல்.

**துலாம்** பிரயாணத்தில் பக்கத்தில்அமர்ந்திருப்பவர் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும், சகஊழியரின் நடத் தையில் சந்தேகம் ஏற்பட்டதால் வாக்குகக்கலகம்.


**விருச்சிகம்** தாரத்துடன் ஏற்பட்டிருந்த கருத்து முரண்பாடு விலகிவிடல், ஏற்பு ஊசி போட அலட்சியமாக இருந்ததினால் தேக நலம் ஆபத்துநிலை அடைதல்.

**தனுசு** பரீட்சைச்சித்தியினால் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படல், விரும்பிய பொருள் வாங்க பிதா இழுத்தடித்த னால் சச்சரவு ஏற்படல். இரவல் வாங்கிய நகையைத் திருப் பிக் கொடாமையால் களேபரம் ஏற்படல்.

**மகரம்** மிகுதிப்பணம் கொடாமையினால் வாக்குவாதம் ஏற்படல், அரசியலை விமர்ப்பதனால் நண்பர் பகைவராதல்.

**கும்பம்** மகாதிசாபுத்திப்பலனைக் கவனித்து பயண ஏற்பாடு பற்றி முடிவு செய்தல், தற்காலிகவேலை நிரந் தரமாக்கப்படும் செய்தியினால் ஆனந்தம், கட்டாயத் திருமணம் செய்ய பெற்றோர் வலியுறுத்தல்.

**மீனம்** வியாழ சுகமின்மையால் அலைச்சலும் வேளை தப்பிய உணவும் ஏற்படல், பங்குத் தொழிலைக் கைவிட்டு தனித்தனித்தியங்க முற்படல்.



# கண்ணீர் மல்க

## டெஸ்டிலிருந்து கையசைத்தார் டில்சான்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் வீரர் டில்சான் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து நேற்று ஓய்வுபெற்றுள்ளார். 36 வயதான டில்சான் 87 டெஸ்ட் போட்டிகளில் 5,492 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவற்றில் 16 டெஸ்ட் சதங்களும் அடங்கும்.

லோர்ட்ஸ் மைதானத்தில் 2011-இல் இங்கிலாந்து அணிக்கெதிராக குவித்த 193 ஓட்டங்கள் அவரது ஆகக்கூடிய டெஸ்ட் ஓட்டங்களாகும்.

சிம்பாப்வே டெஸ்ட் தொடருக்குப் பின்னரே எனது ஓய்வை அறிவிக்கவிருந்தேன். ஆனால் துரதிஷ்டவசமாக அந்த சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

1999ஆம் ஆண்டில் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த டில்சான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 ஆகிய கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவார்.

எனது இடத்திற்கு இன்னொரு இளைஞரை கொண்டுவந்து இலங்கை கிரிக்கெட் சபை ஊக்கப்படுத்துவதற்காக நான் இந்த முடிவை எடுத்தேன். எனது எதிர்காலம் குறித்து தேசிய கிரிக்கெட் தெரிவாளர்களுடன் பேசுவேன். அவர்களுக்கு நான் தேவைப்பட்டால் 2015ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டி வரை விளையாடுவேன் என்றும் டில்சான் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நியூசிலாந்து ஆதிக்கம்



(சிட்டகொங்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முழு ஆதிக்கம் செலுத்தியுள்ளது. நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் சிட்டகொங்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி வில்லியம்ஸன், வைற்லிங் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 469 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 114, வைற்லிங் 103, புல்ரன் 73 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அப்துர் ரசாக் மூன்று, சகிப் அல் ஹசன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மார்சோல் அயூப் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# மூன்றாவது சுற்றில்



(ஷாங்காய்)

சீனாவில் நடக்கும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றுக்கு சேர்பிய வீரர் நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்றுப் போட்டியில், ஸ்பெயின் வீரர் மார்செல் கிரானோலெர்சை, நோவக் ஜோகோவிச் எதிர்கொண்டார். ஆரம்பம் முதலே இப்போட்டியில் ஜோகோவிச் தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்தினார். இதனால் 6,2, 6,0 என்ற நேர் செட்டில் அவர் எளிதாக வெற்றி பெற்று 3ஆவது சுற்றில் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில், சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், இத்தாலியின் ஆன்ட்ரியாஸ் செப்பியை எதிர்கொண்டார். அனுபவம் வாய்ந்த ரோஜர் பெடரர் மிக எளிதாக இப்போட்டியில் செப்பியை வீழ்த்தினார். பெடரர் 6,4, 6,3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். கனடாவின் வாசெக் போஸ்பிசிலை, பிரான்சின் கேல் மான்பில்ஸ் எதிர்கொண்டார். இரு வீரர்களுக்கு இடையிலான இந்தப் போட்டி பெரும் விறுவிறுப்பாக அமைந்தது.

ஆனால், வாசெக்கின் சில தவறுகளை மான்பில்ஸ் தனக்கு சாதகமாக்கிக் கொண்டார். இதன் மூலம் 7-5, 7-6 என்ற செட் கணக்கில் மான்பில்ஸ் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.



# காயத்தால் விலகல்

அடுத்த மாதம் நடக்கவுள்ள வேர்ல்ட் டூர் பைனல்ஸ் ரென்னிஸ் தொடரில் இருந்து, பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே காயம் காரணமாக விலகினார்.

லண்டனில், அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 11ஆம் வரை ஏ.டி.பி., வேர்ல்ட் டூர் பைனல்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெறவுள்ளது. இதில், ஏ.டி.பி., ரென்னிஸ் தரவரிசையில் முதல் எட்டு வரிசையில் உள்ள வீரர்கள் மட்டும் விளையாடுவார்கள். தற்போதுள்ள நிலையில் உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரிட்டனின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் டேவிட் பெரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

இதில், கடந்த மாதம் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்து கொண்ட பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே, இத்தொடரில் இருந்து விலகினார்.இதுகுறித்து ஆன்டி முர்ரே கூறுகையில், இந்த ஆண்டுக்கான வேர்ல்டு டூர் பைனல்ஸ் தொடரில் விளையாட முடியாமற் போனது ஏமாற்றம் அளிக்கிறது. சொந்த மண்ணில் உள்ளூர் இரசிகர்களின் ஆதரவோடு விளையாட மிகவும் ஆர்வமாக இருந்தேன். ஆனால் காயம் காரணமாக விலகவேண்டியதாயிற்று. இத்தொடரில் விளையாட அனைவரும் விரும்புவார்கள். இந்த வாய்ப்பு எளிதாக கிடைக்காது. காயத்தில் இருந்து மீண்டு, அடுத்த ஆண்டு நடக்கவுள்ள இத்தொடரில் நிச்சயம் பங்கேற்பேன் என்றார்.

# இலங்கை குழாம் அறிவிப்பு

நியூசிலாந்து அணியுடனான தொடருக்கான இலங்கை அணியின் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று ஒருநாள் போட்டிகள், இரண்டு ருவென்ரி-20 போட்டிகள் அடங்கிய இத்தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இதில் பங்குகொள்ளவுள்ள இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழாமிலிருந்து இறுதி 15 பேர் கொண்ட குழாம் தெரிவு செய்யப்படும் எனத் தெரிகிறது.

டில்சான் உட்பட சிரேஷ்ட வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, லசித் மலிங்க, நுவான் குலசேகர, ரங்கன ஹேரத் ஆகியோர் இக்குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

அஞ்சலோ மத்தியூஸ், டில்ஷான், திமுத் கருணாரத்ன, குசால் ஜனித் பெரேரா, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, லஹிரு திரிமன்ன, டினேஷ் சண்டிமால், அஷன் பிரியஞ்சன், கித்துருவன் விதானகே, லசித் மலிங்க, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க, திஸர பெரேரா, ரங்கன ஹேரத், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெய்னஸ், சீக்குகே பிரசன்ன, சத்துரங்க டீ சில்வா, இசுரு உதான, றமித் றம்புக்வெல்ல, டில்ருவான் பெரேரா, மிலிந்த சிரிவர்தன.

# கலைக்கப்படுகிறது

## கால்பந்தாட்ட சம்மேளனம்

(கொழும்பு)

தேசிய கால்பந்தாட்ட குழாமை கலைப்பதற்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது.


தெற்காசிய கால்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அடைந்த தோல்விக்கான காரணத்தை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவின் அறிக்கையை பிரதானமாகக் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ தெரிவித்தார்.

அந்த அறிக்கையின் பரிந்துரைப் பிரகாரம் சர்வதேச பயிற்றுனர்களான பிரேஸிலைச் சேர்ந்த றொபடோ சில்வேரா மற்றும் குல்ஹர்மி ஜூனியர் ஆகியோரின் ஒப்பந்தங்களை இரத்துச் செய்ய இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

ஒழுக்கத்தை மீறி செயற்பட்டதன் காரணமாக இலங்கைக் கால்பந்தாட்ட அணியின் முன்னாள் உப தலைவர் சத்துர குணரத்னவை ஒழுக்காற்றுக் குழுவின் முன்னால் நிறுத்தவுள்ளதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் எனவும் இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக கால்பந்து வீரர்களை உருவாக்கும் பெரும் வேலைத் திட்டம் ஒன்று விரைவில் உருவாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குழப்படிகார வோர்னருக்கு தொடரும் போட்டித் தடை




நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் நிர்வாகம், அவுஸ்ரேலிய வீரர் டேவிட் வோர்னருக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கத் தீர்மானித்துள்ளது. அதிரடி வீரரான வோர்னர் சமீபத்திய போட்டிகளில் தொடர்ச்சியாக சொதப்பியதால் ஆஸி. அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, ரந்த்விக் பீற்றர்ஷாம் அணிக்காக அவர் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறார்.வடக்கு மாவட்டங்கள் அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்குவதாக இருந்த அவர், கடைசி நேரத்தில் துடுப்பாட்ட பயிற்சி செய்யப்போவதாகக் கூறி போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். ஆனால், அவர் பயிற்சி செய்யாமல் சிட்னியில் நடந்த குதிரைப்பந்தயத்தை பார்க்கச் சென்றது பத்திரிகைகளில் வெளியான புகைப்படத்தால் அம்பலமானது.இதனால் கடுப்பான நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் நிர்வாகம், மீண்டும் இதே போன்ற தவறு செய்தால் ஒரு ஷெபீல்ட் ஷீல்ட் போட்டி அல்லது என்.எஸ்.டபுள்யு அணி விளையாடும் ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது. கடந்த ஜுன் மாதம் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின்போது, மதுபான விடுதியில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட்டை தர்க்கியதாக வோர்னர் சர்ச்சையில் சிக்கினார். அந்தச் சம்பவத்தை தொடர்ந்தும் அவருக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


# தேசிய தடகளப் போட்டியில் அசத்தியோர்


நிமலேந்திரா



பவித்திரா


லிவிங்ரன்


சார்ள்ஸ் அன்ரனி


றொசான்


ஜக்ஷனா


ஜஸ்மினன்


டிலக்ஷன்


நிதுஷன்



டிலக்ஷனா


லேகாஜினி


தர்சிகா



கமலினி


பிரசாத்


யஜீபன்


செந்தூரன்


யக்ஷிகா


லவணன்

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் வடமாகாணம் ஆறு தங்கம், ப்திினொரு வெள்ளி, ஏழு வெண்கலம், ஆறு வர்ண விருது உட்பட 30 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளது.

இதில் பதக்கம் வென்றோர் விபரம் வருமாறு:

தங்கப் பதக்கம் வென்றோர், ஆர். நிமலேந்திரா (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஏ. பவித்திரா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), டி. டின்சிகா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), எஸ். டிலுக்ஷன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி),. லிவிங்ரன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), ஏ. சார்ள்ஸ் அன்ரனி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

வெள்ளிப் பதக்கம் வென்றோர், ஜே. அனித்தா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), ஜே. அனித்தா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), ஏ. றொசான் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஆர். நிமலேந்திரா (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), கே. யோகேந்திரன் (வவு. பூம்புகார் கண்ணகை வித்தியாலயம்), ஆர். ஜக்ஷனா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), வி. ஜஸ்மினன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர். யஜீவன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஜெ. ஆன்ரு டிலக்ஷன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), பி. ரஜிதா (சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி), பி. நிதுஷன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி).

வெண்கலப் பதக்கம் வென்றோர், கே. டிலக்ஷனா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஜே. சர்மிளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கே. லேகாஜினி (வவுனியா சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி), கே. லேகாஜினி (வவுனியா சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி), ஆர். தர்சிகா (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ஏ. அன்ரனி பிரசாத் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), எம். பிலோனோ கமலினி (உடுவில் மகளிர் கல்லூரி)

வர்ண விருது வென்றோர், ஆர். லக்ஷனா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), பி. விதுர்ஷன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), கே. தனுஷன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), ஆர். செந்தூரன் (யாழ். இந்துக் கல்லூரி), எம். ஜென்சிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஆர். லவணன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

விளையாட்டுச் செய்திகள்

## வாழ்நாள் தடை



(கொழும்பு)

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் இலங்கையின் முன்னாள் கால்பந்து பிரதானியுமான மணிலால் பெர்னாண்டோவிற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பீபா) இத்தடையை விதித்துள்ளது.

2004ஆம் ஆண்டு சுனாமி காலத்தில் கால்பந்து வளர்ச்சி மற்றும் பேரழிவு நிவாரண நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக மணிலால் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் பல சட்டதிட்டங்களை மீறி மணிலால் செயற்பட்டுள்ளார் என நிரூபிக்கப் பட்டதை அடுத்து அவருக்கு 8 வருட தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீபாவின் இந்த தடை உத்தரவை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் வரவேற்றுள்ளது. முறைகேட்டில் ஈடுபடும் அனை வருக்கும் இது போன்ற தண்டனைகள் வழங்கப்படும் பட்சத்திலேயே முறை கேட்டை முற்றாக ஒழிக்க முடியும். அந்த வகையில் இந்த நடவடிக்கை ஆரோக்கியமான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வழிசமைக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

## தண்டனை அதிகரிப்பு

சாதனையை அதிகரிக்கச் செய்யும் ஊக்க மருந்துகளைப் பயன்படுத்தும் குற்றத்தை இழைத்தவர்களாக காணப்படும் விளையாட்டு வீரர்களுக்கு சிறைத் தண்டனையும் கூடுதலான தண்டமும் வழங்க வகை செய்யும் சட்டங்களை அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் ஊக்க மருந்து பயன்பாட்டுக்கு எதிரான சட்டங்களை கடந்த செவ்வாய்க்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த சட்டமூலத்துக்கமைய விளையாட்டில் சாதனைகளை அதிகரிப்பதற்கான ஊக்க மருந்துகளை எடுத்ததாக நிரூபிக்கப்படுவோருக்கு இரண்டு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையையும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்தையும் விதிக்க முடியும்.

## வென்றது சென். அன்ரனீஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அங்கத்துவ அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணி அபார வெற்றி பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன், சென்.அன்ரனீஸ் அணிகள்மோதின. இதில் சென். அன்ரனீஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மானிப்பாய் இந்து, ஊர்காவற்றுறை அன்ரனீஸ் இன்று மின்னொளியில் பலப்பரீட்சை


ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்


மானிப்பாய் இந்து

(தெல்லிப்பளை)

ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஜெயரட்ணத்தின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியும், கண்காட்சிப் போட்டியும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் மூன்றாமிடத்திற்கான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, கண்காட்சிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

இப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற ஏற்பாடாகியிருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் பழைய மாணவர் சமூகம், பாடசாலை நலன் விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)



# சிலியின் புரட்சிப்பெண் கமிலா!

வேணி

தென் அமெரிக்க நாடான சிலியில் (Chile) பிறந்த கமிலா (Camila Antonia Amaranta Vallejo Dowling) என்ற 25 வயது நிரம்பிய இளம் பெண்ணொருவர், சம காலத்திய புரட்சிப் பெண்ணாக சிலியில் கொண்டாடப்படுகிறார். அவர் சிலியில் மட்டுமின்றி தென் அமெரிக்க கண்டம் முழுவதும், ஏன் வட அமெரிக்காவினதும் உலகினதும் கவனத்தையே ஈர்த்து வருகிறார். அப்படி என்ன கவர்ச்சிதான் அவரிடம் உள்ளது?

உலகின் பல நாடுகளைப் போலவே (இதில் நமது இலங்கை விதிவிலக்கு) சிலியிலும் கல்வி ஒரு வியாபாரப் பொருளாகவே இருந்து வருகிறது. அங்கு ஒருவர் கல்வி கற்பதற்கு இலட்சக்கணக்கில் பணம் செலவழிக்கவேண்டும். அங்கு ஆரம்ப கல்வியையே பணம் செலவழிக்காமல் படிக்க முடியாது. அப்படியான நிலையில் அங்கு ஒருவர் பல்கலைக்கழகம் வரையில் கல்வி கற்பதானால் பல்லாயிரம் டொலர்களைச் செலவழித்தால்தான் முடியும். ஆனால் ஏழை நாடான சிலியில் இது சாத்தியப்படாததால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைதான் உள்ளது.

இந்த நிலைமையால் இளம் சந்ததியினர் படிப்பறிவில்லாதவர்களாக உள்ளதுடன், அவர்கள் வேலைவாய்ப்பு இல்லாதவர்களாகவும், தவறான பாதையில் செல்பவர்களாகவும் உருவாகி வருகின்றனர். இந்த நிலை கண்டு கொதித்துப் போனவர்களில் கமிலாவும் ஒருவர். இதை மாற்ற வேண்டும் என நினைத்த கமிலா, சிலியில் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற போராட்டத்தை 2011 பிற்பகுதியில் ஆரம்பித்தார்.

கமிலா ஆரம்பித்த இந்தப் போராட்டத்தால் முழு சிலி நாடுமே ஸ்தம்பித்தது. ஒவ்வொரு வாரமும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் தலைநகர் சந்தியாகோவை (Santiago) முற்றுகையிட ஆரம்பித்தனர். அதன் காரணமாக பல பல்கலைக்கழகங்களும், பாடசாலைகளும் காலவரையறையின்றி மூடப்பட்டன. பொலிசாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு, அவர்கள் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடி, துப்பாக்கிப் பிரயோகம் என்பனவற்றை நிகழ்த்திய போதிலும், மாணவர்களின் போராட்டத்தை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் காரணமாக சிலி அரசாங்கம் ஒரு முழுக் கல்வி ஆண்டையே இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

சிலி அரசாங்கம், போராட்டத்தை முறியடிப்பதற்காக பேச்சுவார்த்தை நடாத்தி, கல்விக்குக் கூடுதலான நிதி அளிப்பதாக அறிவித்தது. அரசின் இந்த அறிவிப்பு வெறும் கண்துடைப்பு என்று கண்ட மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தும் உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றனர். அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுவதை உத்தரவாதப்படுத்தும் வரை போராட்டத்தைத் தொடரப்போவதாக கமிலா தலைமையில் போராடும் மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தை வழி நடாத்தும் கமிலாவின் திடசங்கற்பத்திற்கும், துணிவுக்கும் ஆதாரமாக அமைந்துள்ள விடயம் அவரது பெற்றோர்கள் அவருக்கு உருவாக்கிக் கொடுத்த அத்திபாரம்தான். தந்தை ரொனால்டோ வலேஜா, தாய் மரிலா டவ்லிங் இருவருமே சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் 1973இல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சிலியின் ஜனாதிபதி சல்வடோர் அலன்டேயை (Salvador Allende) கொலை செய்து, இராணுவ சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய அமெரிக்க விசுவாசியான சர்வர்திகாரி அகஸ்டோ பினோசெற்றின் (Augusto Pinochet) எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக முன்னணியில் நின்று போராடிய போராளிகளாவர்.

இந்தப் பின்னணியில் 2006இல் சிலி பல்கலைக்கழகத்தில் புவியியல் பட்டப்படிப்புக்காக சேர்ந்த கமிலா, அங்கே இடதுசாரி மாணவர் அமைப்புடன் தன்னை இணைத்துக்கொண்டு, மாணவர் பிரச்சினைகளுக்காக நடந்த எல்லாப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்றார். தனது இரண்டாவது கல்வி ஆண்டில் அவர் சிலி பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவரான போது, அவரது பெயர் சிலி முழுவதும் பிரபல்யம் அடைந்ததுடன், முழு மாணவர்களும் அவரது தலைமைத்துவத்தைச் சுற்றி அணிதிரளத் தொடங்கினர்.

உலகின் செல்வாக்கு மிக்க அமெரிக்க “ரைம்” (Time) சஞ்சிகை அவரை உலகின் சக்திவாய்ந்த 100 ஆளுமைகளில் ஒருவராகத் தெரிவு செய்தது.

“கார்டியன்” (Guardian) பத்திரிகை கமிலாவை “2001ஆம் ஆண்டின் மிகச் சிறந்த ஆளுமை” எனக் குறிப்பிட்டது.

“நியூஸ்வீக்” (Newsweek) சஞ்சிகை கமிலாவை உலகின் துணிச்சல் மிக்க 150 பெண்மணிகளில் ஒருவர் என வர்ணித்துள்ளது.

“உலகின் மிக அழகான புரட்சியாளர்” என கமிலாவை “நியூயோர்க் ரைம்ஸ்” (Newyork Times) புகழாரம் சூட்டியுள்ளது.

இவரது “ருவிற்றர்” கணக்கை தொடர்பவர்களின் எண்ணிக்கை 7 இலட்சம் பேராவர்!

(வானவில் 32)

# ஆங்கிலப் பிசாசு!






நமது மாணவர்கள் ஆசிரியரைத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் பயப்படுகிறார்கள்! பேச, எழுத, படிக்க, மனப்பாடம் செய்ய, வகுப்புக்கு வர என்று பயப்படும் இடங்களின், சூழ்நிலையின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இது ஒரு வித்தியாசமான பயம். இது ஒரு கற்பனையான பயம். தப்புச் செய்துவிடுவோமே என்ற பயம். அதன் காரணமாகவே தப்பு செய்துவிட வழி வகுக்கும் பயம்.

ஒரு மனிதனுக்கு பயம் வருவதற்கு ஒரே ஒரு காரணம்தான் உள்ளது. தான் யார் என்று தெரிந்து கொள்ளாததுதான் அது. எதைப் பார்த்து நாம் பயப்படுகிறோமோ, அதைச் சமாளிக்கக் கூடிய சக்தி நம்மிடம் இல்லை என்று பொருள்.

அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? அந்தச் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். அந்த சக்தியையும் நம் வெளியில் இருந்து பெற வேண்டியதில்லை. நமக்குள்ளேயே இருப்பதுதான் அது. அதைத் தேவைப்படும் அளவுக்கு வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன். அதனால் பயம் தானாகப் பயந்து ஓடிவிடும். பயம், குழப்பம், கவலை போன்ற எதிர்மறை எண்ணங்களை வைத்துக் கொண்டு ஒரு காரியத்தில் ஈடுபட்டால் அது தோல்வியில்தான் முடியும்.

தத்துவரீதியாக நான் பேசுவதாக நினைக்க வேண்டாம். ஜோயல் வெல்டன் என்ற ஓர் உளவியலாளர் இருந்தார். அவர் சீன நாட்டில் விளையும் ஒரு வகையான மூங்கிலைப் பற்றிய ஓர் அருமையான தகவலைத் தருகிறார்.

பூமிக்கு வெளியில் தலை நீட்டி வெளியில் வருவதற்கு முன் ஐந்து ஆண்டுகள் அது பூமிக்கு அடியிலேயே இருக்குமாம். அதாவது, அப்படி ஓர் மூங்கில் மரம் இருக்கிறதா? இல்லையா? என்று அடையாளம் தெரியாத அளவுக்கு. ஆனால் ஐந்து ஆண்டுகளான பிறகு அது வெளிக்கிளம்ப ஆரம்பிக்கும். எத்தனை அடிகள் வளரும் தெரியுமா? 90 அடிகள். அதுவும் ஆறே வாரங்களில்.

அதாவது ஆறு வாரங்களில் 90 அடி வளர்வதற்கான தகுதியை அது ஐந்து ஆண்டுகளாக யாருக்கும் தெரியாமல் பூமிக்கடியில் வைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அவ்வளவு குறுகிய காலத்தில் அப்படி ஓர் அசுர வளர்ச்சி அதற்குச் சாத்தியமாகிறது. அப்படிப்பட்ட வியத்தகு வளர்ச்சி கொள்ளத் தகுதி உள்ளவன் தான் என்று தெரியாமல் பூமியின் மேல் வாழ்ந்து பூமிக்கடியில் மறைந்து போகிறான் மனிதன். இதுதான் உண்மையான மானிட சோகம். எல்லாப் பயங்களின் அஸ்திவாரமும் இந்த அறியாமைதான்.


மாணவர்களைப் பொறுத்தவரை இந்தப் பயங்களின் ஆரம்ப வேர் ஒன்று உள்ளது. அது மொழியறிவின்மையில் தொடங்குகிறது. பத்தாம் வகுப்பு படித்தாலும் சரி, அல்லது எந்த டிகிரி, டிப்ளோமா படித்தாலும் சரி... பெரும்பாலான மாணவர்கள் பயப்படுவது ஆங்கிலம் என்ற ஒரு பிசாசுக்குத்தான். மாணவர்களில் முக்கால் வாசிப்பேர் ஆங்கில மீடியத்தில் படிக்காதவர்களாகவும், அப்படியே படித்தாலும் தேவைப்படும் அளவுக்கு ஆங்கில அறிவைப் பெறாதவர்களாகவும் உள்ளதுதான் இதற்குக் காரணம்.

**(‘வெற்றிக் கொடி கட்டு’ நூலில் நாகூர் ரூமி)**

# பாராட்டும் வசைபாடலும்: விஞ்ஞானிகள் விளக்கம்

நம்மில் பெரும் பான்மையான மக்கள் மகத்தான காரியங்களைச் செய்யும் போது பிறரின் பாராட்டுக்களை ஏற்றுக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியுடன் நூற்றுக்கு நூறு விதம் உடன் படுவோம்.

ஆனால் நம்மில் வெகு சிலரே சில வேளைகளில் நாம் செய்யும் காரியங்களில் தவறு நிகழ்ந்து விட்டால் பிறரின் வசை மொழிகளை ஏற்றுக் கொள்வது வழக்கம். இந்த வேறுபாடு ஏன்? இதற்கான காரணத்தை லண்டனைச் சேர்ந்த மூளை மற்றும் நரம்பியல் விஞ்ஞானிகள் சிலர் சமீபத்தில் விளக்கியுள்ளனர்.




அதாவது நாம் செய்யும் செயல்கள் எதிர்மறையான முடிவைத் தரும் போது நாம் அது குறித்து மிகக் குறைந்த கவனத்தையே செலுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது.

விரிவாக சொன்னால் மோசமான விளைவை ஏற்படுத்திய செயல்கள் குறித்த முடிவுகளை எடுப்பதில் சாதாரண செயல்களை விட நமது மூளை மிக அதிக நேரத்தை எடுத்துக் கொள்வதால் நம்மில் பெரும்பான்மையினர் செயல்களுக்கான பொறுப்பின்ன உடனே ஏற்றுக் கொள்ள இணங்குவதில்லை.

இதனால் தான் அனைத்துச் செயல்களையும் பொஸிட்டிவ்வாக எடுத்துக் கொள்ளும் தன்மை நம்மில் மிகச் சிலருக்கே வாய்த்திருக்கின்றது.


இதனை விஞ்ஞான ரீதியாக நிரூபிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரிடம் ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. இதன் போது அவர்கள் ஒரு பட்டனை அழுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் உடனடியாக ஒரு ஒலி அலை ஓடவிடப்பட்டது. பின்னர் அவர்கள் பட்டனை அழுத்துவதற்கும் ஒலி அலையைக் கேட்பதற்கும் இடையே எடுத்த நேரத்தைக் கணக்கிடுமாறு வேண்டப்பட்டது.

இதன் போது ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்ப ஆராய்ச்சியாளர்கள் பெற்ற முடிவு வேறுபட்டது. மேலும் இதன் மூலம் அவர்களின் செயல் நேர்மறையை விட எதிர்மறையாக இருக்கும் போது குறித்த நபர்களின் மூளை அதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் எடுத்துக் கொண்டமை புலப்பட்டது.

இந்த ஆராய்ச்சி முடிவை லண்டனில் உள்ள கானிட்டிவ் நரம்பியல் விஞ்ஞான பல்கலைக்கழகப் பேராசிரியர் பட்ரிக் ஹக்கார்ட் வெளியிட்டுள்ளார்.

# இனத்துவ உணர்வை தூண்டும் முயற்சிகளை கைவிட வேண்டும்

— சாலையூரான் —



சில பௌத்த அமைப்புக்கள் இனவாத தீயினை மூட்டிவிட மீண்டும் முயற்சிப்பதாக எம்.வி.ரஸ்மியின் சிங்கள இலக்கியங்கள் ஒரு பன்மைத்துவ நோக்கு என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் அமைச்சர் வாசு தேவா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

முஸ்லிம்கள் விடயத்தில் பொதுபலசேனா அமைப்பு சிங்கள இனத்தின் பாதுகாவலனாக தன்னை காட்டிக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளை மேற்கோள்காட்டி அமைச்சர் வாசுதேவா தனது கண்டனத்தை வெளியிட்டிருக்கிறார்.

தற்போது சிறுபான்மையினர் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் இனத்துவ உணர்வுகள் போர்ச்சூழலாக மாற்றம் பெறுமாயின் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலை உருவாகுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

மறுபுறத்தே ஜனாதிபதி முன் முதலமைச்சருக்கான விக்னேஸ்வரனின் சத்தியப்பிரமாணத்தை ஆயுதபலத்தால் தோற்கடிக்கப்பட்ட ஒரு அமைப்புக்கு அரசியல் அந்தஸ்தை வழங்கும் ஒரு முயற்சியென பொதுபலசேனா அரசு மீது குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அதேசமயம், தமிழ் தரப்பிலிருந்து ஜனாதிபதிமுன் சத்தியப்பிரமாணம் எடுக்க சம்பந்தனும் விக்கினேஸ்வரனும் மேற்கொண்ட முயற்சிக்கு தமிழ் கூட்டமைப்புக்குள் இருந்து பலத்த கண்டனங்கள் வெளிக்கிளம்பி இருக்கின்றன.

அரசுக்கு எதிராக பிரசாரம்செய்து மாகாண சபையை கைப்பற்றிய பின் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் எடுப்பது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் என்ற அடிப்படையில் கூட்டமைப்புக்குள்ளே இருந்து இக் கண்டனங்கள் எழுந்திருக்கின்றன.

இந்த சத்தியப்பிரமாணத்தில் பிரசன்னமாகிவிடக்கூடாது என்பதற்காக மாவை எம்.பி சென்னைக்கு உடன் பயணமாகியிருக்கிறார். ஒரு மதகுரு, சமாதான நீதவான், அல்லது தமது கட்சித்தலைவர் முன்னிலையில் இந்த முதலமைச்சர் சத்தியப்பிரமாணத்ததை எடுத்திருக்கலாம் என்பது தமிழ் கூட்டமைப்பினரில் பெரும்பாலானோரின் வாதம்.

இதில் ஏற்பட்ட குழப்பங்களால் சத்தியப்பிரமாணத்தின் பின் கொழும்பிலுள்ள தமிழ் தரப்புக்கள் ஏற்பாடு செய்த வரவேற்பு நிகழ்வில்கூட கலந்துகொள்ள முடியாத அளவிற்கு விக்கினேஸ்வரன் மனப்பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்.

தென்னிலங்கையில் உள்ள சிறுபான்மை கட்சிகள் தமிழ் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தேசத்துக்கு விரோதமானதென கூறி நீதிமன்றில் வழக்குத்தாக்கலுக்கு கொண்டுசென்றதன் மூலம் வடமத்திய; மத்திய மாகாணசபை தேர்தல்களில் அரசின் வெற்றியை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

அது மட்டுமன்றி இந்த வழக்குத்தாக்கலால் வடக்கில் தமிழ் மக்களின் இனஉணர்வுகளையும் கிளறிவிட்டு தமிழ் கூட்டமைப்பின் பெருவெற்றிக்கும் இந்த தென்னிலங்கை சிறுபான்மை கட்சிகள் உதவியிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த இனவாத அலையிலிருந்து நாட்டில் வாழும் மூவின மக்களை விடுவிக்கும் அரசியல் பொறிமுறை இனங்காணப்படாதவரை அந்த இனத்துவ உணர்வின் பெயரால் சமூகத்தில் மேட்டுக்குடிகளின் நலன்களுக்காக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் விலை பேசப்பட்டுக்கொண்டே இருக்கும் என்பதை மட்டும் நிச்சயமாகக் கூற முடியும்.

## தேயிலை – சில தகவல்கள்!




- தேயிலையின் குடும்பப் பெயர் தேயா சைனன்சிஸ். சில இடங்களில் சாயா என்றும் சாய், சா என்றும் அழைக்கப்படும் சிறப்புக்குரியது.
- உலகின் பெரும்பாலான பகுதிகளில் காலை, மாலை பருகப்படும் பானமாக தேநீர் திகழ்கிறது. எந்த நேரமும் பருகவும் ஏற்ற பானம்.
- திபெத்தில் ஆட்டுப்பால், மாட்டு வெண்ணெய், உப்புடன் தேயிலையைக் கலந்து கடவுளுக்குப் படைக்கும் வழக்கம் உள்ளது.
- கண்களுக்குக் கீழே வீக்கமிருந்தால் பற்றுப் போட்டுக் குணப்படுத்த தேயிலை உதவுகிறது.
- காய்ச்சல், பார்வைக்குறைவு, தலைவலி, வயிற்றுவலி, மூட்டுவலி, கீல்வாத நோய்களுக்கு நாட்டுமருந்தாகவும் தேயிலை பயன்படுகிறது.
- தேயிலையின் தாயகம் சீனா. நான்காயிரம் ஆண்டுகளுக்கும் முந்தைய வரலாறு இதற்குள்ளது.
- சீன தேசத்தின் இரண்டாவது சக்ரவர்த்தி ஷென்நாங் என்பவர்தான் முதல் முதலில் தேநீரை ருசித்தவர் என்று சீன வரலாறு கூறுகிறது.

## குடிக்காது என்று தெரிந்தும் பாம்பிற்கு பால், முட்டை வைப்பதன் காரணம் என்ன?

உண்மையும், விஞ்ஞான ரீதியாக ஒத்துக்கொண்ட விடயமும் என்னவென்றால் முட்டையையும் பாலையும் பாம்பு குடிக்காது. பின்னர் எதற்கு புற்றுக்குள் பால் ஊற்றுகிறார்கள்? ஆதி காலத்தில் மனிதனுக்கு பெரிய பிரச்சினையாக இருந்தன பாம்புகள்.


காரணம். அடர்ந்த காடுகள், மனித நடமாட்டம் மிக மிகக் குறைவு. மனிதனை விட பாம்புகள் அதிகம் காணப்பட்டது. ஒரு உயிரினத்தை கொல்லும் உரிமை இந்து சமயத்தை பின்பற்றும் மக்களுக்கு இல்லை. அப்போது அவர்கள் அனைத்தையும் மதித்தார்கள். ஆகவே அதனை கொல்லாமல் அதன் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முயன்றனர்.



பாம்புகள் இனப்பெருக்கம் மேற்கொள்வது மிகவும் வித்தியாசம். பெண் பாம்பு தான் உடலில் இருந்து ஒரு வித வாசனை திரவத்தை(பரோமோன்ஸ்) அனுப்பும். அதனை நுகர்ந்து ஆண் பாம்பு பெண் பாம்பை தேடி வரும்.

பெண் பாம்பில் இருந்து வரும் வாசனையை கட்டுப்படுத்தும் வேலையை பால் முட்டையிலிருந்து வரும் வாசனை தடுக்கிறது. ஆகவே அவற்றால் இனப்பெருக்கம் செய்ய முடியாது.

## பாதிப்பில் உருவான படங்கள்




### 43. The Dawns Here are Quiet (1972)

ரஷ்ய எழுத்தாளர் போரிஸ் வஸிலியேவ் நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம். ரஷ்யாவின் வட மேற்கில் பின்லாந்தை ஒட்டிய காட்டுப்பகுதியில் நாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு சதியை முறியடிக்கும் கதை. எலீனா ட்ராபெகோ, எகெட்ரினா மார்க்கோவா, ஒல்கா ஒஸ்ரோமோவா ஆகியோர் நடித்தது.

**தமிழில் - ஜெயம் ரவி, வடிவேலு, ஊர்வசி ஆகியோர் நடித்து எஸ்.பி.ஜனநாதன் இயக்கத்தில் வெளிவந்த பேராண்மை (2009)**




### 44. Dog Bite Dog (2006)

கம்போடிய நாட்டைச் சேர்ந்த குற்றவாளி ஒருவன் ஹொங்கொங் பொலிசாரால் சிறைப்பிடிக்கப்படுகிறான். காதலியுடன் சேருவதற்காக அவர்களிடமிருந்து தப்பித்து ஓடுகிறான். அவனும் காதலியும் அவனைப் பிடிக்கச் சென்ற பொலிசாரும் காட்டில் வழிதப்பி அலையும் கதை. எடிசன் சென், சாம் லீ, வெய்யிங் பீ ஆகியோர் நடித்தது.

**தமிழில் - விதார்த், அமலா பால், தம்பி ராமையா ஆகியோர் நடித்து பிரபு சாலமன் இயக்கத்தில் வந்த மைனா (2010)**




### 45. Making Mr. Right (1987)

பிரபல விஞ்ஞானி ஒருவன் தன்னைப் போலவே தோற்றம் கொண்ட ரோபோ ஒன்றைப் படைக்கிறான். அவனையும் மீறி அது மனிதக் குணங்களைப் பெற்றுவிடுகிறது. அதற்கான அறிவைப் பழக்குவதற்கு நியமிக்கப்பட்ட பெண் அதைக் காதலிக்கத் தொடங்குகிறாள். ஜோன் மல்கோவிச், ஆன் மக்னுசன், கிளென் ஹெட்லி ஆகியோர் நடித்தது.

**தமிழில் - ரஜினி, ஐஸ்வர்யா ஆகியோர் நடித்து ஷங்கர் இயக்கத்தில் வந்த எந்திரன் (2010)**

# யா/அருணோதயக்கல்லூரி

J/ARUNODAYA COLLEGE

வரம் ஒரு பாடசாலை

# அரும் பெரும் சாதனைகள் ஆற்றிவரும் அளவெட்டி அருணோதயக்கல்லூரி


## அருணோதயக்கல்லூரியின் வரலாறு...

ஒன்றே கால் நூற்றாண்டை அண்மித்திருக்கும் அளவை அருணோதயக்கல்லூரி இன்று புதிய மாடிக்கட்டடங்களையும், புதிய ஆய்வுகூடத்தினையும், சிறந்த நேர்த்தி மிக்க மைதானத் தினையும் பூஞ்சோலைகளையும் கொண்டு திகழ்கின்றது. ஒரு கிடுகுக்கொட்டிலில் 1894 இல் ஆரம்பிக்கப்பட்ட பாட சாலையே இன்று ஆலவிருட்சமென உருவெடுத்து நிற்கின்றது. இக்கல்லூரி திரு. நாகமுத்து அருணாசலவுடையாரால் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்பகால முதன்மையாசிரியர் திரு.மு.செல் லப்பாச்சட்டம்பியார் ஆவார். அவருக்கு உதவியாசிரியர் பரமுச்சட்டம்பியார் ஆவார். 1898 அளவில் பதவியேற்ற சின்னத் தம்பிச்செட்டியாரின் முயற்சியினால் இது ஆண்கள் ஆங்கில ஆரம்பப்பாடசாலையாக முழுமையடைந்தது. 1904 இல் அரசினர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகியது. திரு க.சோமசுந்தரம் தலைமைப்பதவியேற்றதிலிருந்து இது ஆரம்பப் பாடசாலை என்ற நிலையிலிருந்து எட்டாம் தரம்வரையுள்ள பாடசாலையாக வளர்ச்சி கண்டது. இவருக்குப்பின்னர் கடமையேற்ற திரு.த.சின்னத்தம்பி(1929) அவர்களின் காலத்தில் இப்பாடசாலை ஆண்கள் பாடசாலை என்ற நிலையிலிருந்து மாறி கலவன் பாடசாலையாகி துரித வளர்ச்சி பெற்றது. இவர் கல்வியில் மட்டுமன்றி மாணாக்கர் ஒழுக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவர் ஓய்வுபெற்ற பின் திரு.ப.நவரத்தினம் ஒரு வருடம் தலைமையாசிரியாராகவிருந்தார். இவரின் பின் திரு.எஸ்.கிருஸ்ணபிள்ளை என்ற தமிழக அறிஞர் தலைமை யாசிரியரானார். இவரது காலத்தில் அருணோதயக்கல்லூரியின் பொன்விழாக்கொண்டாடப்பட்டது.



பாடசாலை அதிபர் நா.கேதீஸ்வரன்



அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்கள்

### வலயமட்டப்போட்டியில் சதுரங்கத்தில் அருணோதயவின் 3 அணிகள் சம்பியனாகிச் சாதனை








வலிகாமம்வலய சதுரங்கப்போட்டிகள் கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன. இப்போட்டிகளில் 15 வயது ஆண்கள், 15பெண்கள், 19வயதுப்பெண்கள் ஆகிய பிரிவுகளில் முதன்முறையாக அருணோதயக் கல்லூரி சம்பியனாகிச் சாதனை புரிந்தது.

### தேசியமட்டத்தமிழ்த்தினப் போட்டியில் அருணோதயக்கல்லூரி மாணவிகள் சாதனை-2013



செல்வி.தே.உமையாளினி



செல்வி.ஸ்ரீ.வேதிகா

நடைபெற்று முடிந்த தேசிய மட்டத்தமிழ்த் தினப்போட்டி யில் அருணோதயக்கல்லூரியின் இரு மாணவிகள் முதலிடத்தி னைப்பெற்று தங்கப்பதக்கத்தினை சுவீகரித்தனர்.உமையாளினி பிரிவு IV இல் கட்டுரை வரைதலில் முதலிடத்தினைப்பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுள்ளார். இம்முறைபெற்ற தங்கப்பதக்கத்துடன் தொடர்ச்சியாக மூன்றாவது தடவை யாகவும் தங்கப்பதக்கத்தினை பெற்றுக் ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளார். இவர் இருமுறை கட்டுரை வ்ரைதலிலும் ஒரு தடவை குறுநாடக ஆக்கத்திலும் தங்கப்பதக்கத் தினைப்பெற்றுள்ளார்.

வேதிகா இவ்வருடம் நடைபெற்ற தேசியமட்டத் தமிழ்த்தினப்போட்டியில் பிரிவு IV இல் சிறுகதையாக் கத்தில் முதலிடத்தினைப்பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுள்ளார். தேசியமட்டத்தில் வெற்றி பெற இவர்களை வழிப்படுத்திய செல்வி ச.சுப்பிரமணியம் ஆசிரியரையும் வெற்றியைப்பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த மாணவிகளையும் பாடசாலைச்சமூகம் பாராட்டு கின்றது.

### மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி பதக் கங்கள் - 2013



நப்தலி ஜோய்சன்

1ஆம் இடம்



சாத்வீகா

1ஆம் இடம்

### மாகாண மட்ட புதிய சாதனைகள்

**பதக்கங்கள்**

தங்கம்-08 வெள்ளி-05 வெண்கலம்-05

**புதிய சாதனைகள்**

நப்தலி ஜோய்சன் 110 அ சட்டவேலி 1ஆம் இடம் 15 வயதுப்பிரிவு

சாத்வீகா 110 அ சட்டவேலி 1ஆம் இடம் 15 வயதுப்பிரிவு

லவணன் கோலூன்றிப்பாய்தல் 1ஆம் இடம் 19 வயதுப்பிரிவு

அ.ஹொகாய் றொசான் கோலூன்றிப்பாய்தல் 1ஆம் இடம் 21வயதுப்பிரிவு

### அருணோதயக்கல்லூரி உயர்தர மாணவ மன்றமும் சுகாதாரமன்றமும் இணைந்து ஒழுங்கு செய்த இரத்ததான முகாம்-2013-03-06



தானங்களில் சிறந்தது இரத்ததானம் யாழ். போதனாவைத்தியசாலை வைத்தியர்களின் வேண்டு கோளிற்கிணங்க அருணோதயக்கல்லூரி உயர்தர கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களும் பிரதி அதிபர், ஆசிரியர்கள் சிலரும் தாமாகமுன்வந்து இரத்ததானம் செய்தமை பலரது பாராட்டையும் பெறவைத்ததோடு மாணவரின் முன்மாதிரியான சமூக சிந்தனையையும் வெளிப்படுத்தியது.



யஜீவன் விதுஷன் சார்ள்ஸ் அன்ரனி லவணன் ஜக்சனா

ஜென்சிகா டிலக்சனா நிதுஷன் பவித்திரா றொசான்

2013 தேசிய தடகளப்போட்டியில் அசத்தியோர்.

# மாந்தை கிழக்கு உள்ளக வீதிகளை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள வயல்வெளியூடாகச் செல்லும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பல வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் .

இவ் வீதிகள் போரால் மிகவும் சேதமடைந்துள்ளன . மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகியும் இவ் வீதிகள் புனரமைக்கப்படாமையினால் இவ் வீதிகளில் பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குச் செல்லும் சிவபுரம் - செல்வபுரம், சிவபுரம் - பாண்டியன் குளம் வீதிகள் சேதமடைந்துள்ளதால் மழை காலங்க்ளில் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை கொல்ல விளாங்குளம், வன்னி விளாங்குளம், பாலைநகர் ஆகிய இடங்களுக்கு வயல் வெளியூடாகச் செல்லும் வாய்க்கால்களுடன் இணைந்த வீதிகளும் சேதமடைந்துள்ளதால் குறிப்பாக விவசாயிகளும் ஏனைய பயணிகளும் பாதிககப்படுகின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் வீதிகளின் நிலை குறித்தும் புனரமைக்க வேண்டிய அவசியம் குறித்தும் பலதடவைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நிதியின்மையே புனரமைக்கப்படாமைக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் பதவிவெற்றிடங்களுக்கு விண்ணப்பம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் காணப்படும் பதவிவெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிகப் பணிப்பாளர் நாயகம், மொழி பெயர்ப்பாளர் (சிங்களம், தமிழ்) ஆகிய பதவிகளுக்கு 22இறகும் 50 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித்தகைமையாக பல்கலைக்கழக பட்டமும், கலா நிதிப்பட்டமும் பெற்று முகாமைத்துவ மட்டத்தில் 10 வருட அனுபவமும் (மேலதிகப் பணிப்பாளர் நாயகத்திற்கு) தேவை.

மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு பல்கலைக்கழகத்தில் சிங்களம், தமிழ் பாடங்களுடனான பட்டதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிங்களம், மற்றும் தமிழ்மொழியில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் 22.10.2013 இற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், வித்தியா மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்.கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடல்வேண்டும் பதவி நிரந் தரமானதும் ஓய்வூதியத்திற்குட்பட்டதாகும். (105)

## நீதிமன்றச் செய்திகள்

முள்ளிவாய்கால் பகுதியில் 3 சிறுமிகளை பாலியல் வன்புணர்வுக்காக கடத்தி செல்ல முற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு விசாரணையின் பின் ஒருவருட கடுழியசிறைத்தண்டனையும் 30000/= நஷ்டஈடாக வழங்குமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபரின் வயதையும் குடும்பநிலையையும் கருத்திற்கொண்டே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது

□ □ □

ஒட்டுசுட்டான் பகுதியில் முதல்மனைவி இருக்க இன்னொருவரை திருமணம் புரிந்த நபர் ஒருவருக்கு இருதாரமணக் குற்றச்சாட்டினடிப்படையில் ஒருவருடக் கடுழியச்சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

இரண்டாவது மனைவியும் தன்னை கைவிட்டு சென்றுவிட்டதாக மன்றில் தெரிவித்தார்.

□ □ □

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலனிப்பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தம் சம்பந்தமாக நடைபெற்ற வாக்குவாதத்தில் ஈடுபட்டு சங்கிலியாலும் பொல்லாலும் நபர் ஒருவரை தாக்கிய மூவருக்கு 1வருட கடுழிய சிறைத் தண்டனை வழங்கி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தீர்ப்பளித்தார்.

காயத்தின் தன்மை மற்றும் வழக்கின் பாரதூரத்தன்மையை கொண்டு மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (170)

## தெய்வீகப்பேருரை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேஷ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.30 மணிக்கு தெய்வீகப்பேருரை இடம்பெற்றுவருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாருதி என்னும் விடயம் பற்றி ஆசிரியர் க.கைலை நாதன் பேருரையாற்றுவார்.

## பதிவிருக்கப் பெட்டகம்

தமிழக தமிழ் தேசியவாதிகள் சிலர் [குறிப்பாக : மே17 அமைப்பினர்], இலங்கை சென்ற இந்திய நடிகை அசின் போன்ற சினிமா துறையினருக்கு எதிரான போராட்டத்தை, "இலங்கையில் முதலிட்டுள்ள இந்திய முதலாளிகளுக்கு எதிரான வர்க்கப் போராட்டம்" என்று சொல்லித் திரிகின்றனர். முப்பது வருடங்களுக்கு முன்னர் ஈழத்தில் டெலோ என்ற இயக்கமும், இதே மாதிரியான அரசியல் பேசியது. வர்க்கங்கள் என்றால், அது தமிழ் வர்க்கம், சிங்கள வர்க்கம் என்றது. ஒடுக்கும் சிங்கள வர்க்கத்திற்கு எதிராக, ஒடுக்கப்படும் தமிழ் வர்க்கம் நடத்தும் போராட்டமே வர்க்கப் போராட்டம் ஆகும் என்று மார்க்சியத்தை கவிழ்த்துப் போட்டு எம்மை எல்லாம் அசத்தியது. தமிழ் தேசியவாதிகள் என்றால் வலதுசாரிகள் மட்டும் தான் என்று யார் சொன்னது? டெலோ, மே 17 மாதிரியான "இடதுசாரிகளும்" இருக்கின்றனர். முதலாம் உலகப்போருக்கு பின்னரான ஜேர்மனியிலும், இப்படியான இடதுசாரி தேசியவாதிகள் உருவானார்கள். காலப்போக்கில் நாஜிக் கட்சியுடன் ஒன்று கலந்துவிட்டனர். அன்றிருந்த நிலைமையில், ஹிட்லர் கூட ஒரு வகையில் "இடதுசாரி" தான். அவர் தனது கட்சிக்கு "தேசிய சோஷலிசக் கட்சி" என்று பெயரிட்டார். ஏனென்றால் தேசியவாதிகள் வலதுசாரிகளாக இருக்கலாம், ஆனால் மக்களை கவர்வதற்காக கொஞ்சம் இடதுசாரியம் பேச வேண்டி உள்ளது. – **கலையரசன்**

இந்தக் கஷ்டங்கள் தீர வேண்டுமானால் காத்திருக்க வேண்டும். இப்படிக் காத்திருக்கும்போது பிள்ளைகள் பிறந்து கொண்டேயிருப்பார்கள். நாம் இறந்துகொண்டேயிருப்போம். இல்லாவிட்டால் இந்த உலகத்தில் யாராவது வாழ்வது சாத்தியமா? இன்னமும் அந்த ஸ்டாலினும் ஹிட்லரும் இருந்திருப்பார்கள். அப்படிப்பட்ட துஷ்டர்களை விடுங்கள். எல்லாப் புனிதர்களும் சாகாதிருந்தால் அவர்களும் நமக்குத் தொந்தரவாகியிருப்பார்கள். உண்மையில் சாவு ஓர் அதிசயந் தான். பிறப்பும் அப்படியே. புதிதாகப் பிறப்பவர்களின் செயல் திட்டம் என்னவாயிருக்குமோ? ஆனால், அவர்களுக்கு எந்தச் செயல்திட்டமும் இல்லாதவாறு நாம் இந்தப் பூமியையே நாசப்படுத்திவிட்டால், என்ன கதி? இந்தப் பூமி இருக்கும்வரைக்கும் அவர்களுக்கு வேறு செயல்திட்டங்கள் இருப்பதற்குச் சாத்தியமுள்ளது. பூமித்தாய்க்கு மிகச் சகித்துக்கொள்ளும் சக்தி இருக்கிறது. எதுவரை நாம் பூமித் தாயைக் காப்பாற்றுகிறோமோ அதுவரைக்கும் நமக்குப் பிறகு வருகிறவர்களுக்கு அவர்களுக்கேயான செயல்திட்டங்கள் இருப்பது சாத்தியம். – **யூ.ஆர்.அனந்தமூர்த்தி**


நீங்கள் ஒரு பேருந்தில் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள். இயற்பியல் விதிகளின் படி பேருந்தின் வேகத்திற்கு சமமாக நீங்களும் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள் எனும் உண்மையின்படியே நீங்களும் பேருந்தில் பயணிப்பவர்களுடன் ஒரு அங்கமாக, திரண்ட கூட்டத்தின் ஒரு பகுதியாக மாறி விடுகிறீர்கள். நீங்கள் பயணிக்கும் பேருந்தை வேறெந்த வாகனமாவது முந்த வந்தால், அதனால் உங்கள் பயணம் தடைப்பட்டால் சக பயணிகளையும் போலவே உங்களுக்கும் கோபம் வந்துவிடுகிறது. எரிச்சலுடன் கடந்து செல்லும் வாகனத்தின் ஒட்டுநரை திட்டுகிறீர்கள், சபிக்கிறீர்கள் குறைந்த பட்சம் முணுமுணுக்கிறீர்கள்.

நீங்கள் பயணிக்கும் வாகனத்தின் ஓட்டுநர் ஏதாவது தவறு செய்திருந்து அதனால் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டாலும், ஓட்டுநரின் மீதுதான் தவறு என்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும் தன்னிச்சையாகவே ஓட்டுநரின் மீது எழும் பற்றினால் அவருக்குச் சார்பாகவே உரையாடுகிறீர்கள். மற்ற வாகனங்களை வெறுக்கிறீர்கள்... உங்கள் பயணம் தடைப்படக்கூடாது என்கிற சுயநலமும் அதில் ஒளிந்திருக்கிறது...

பேருந்தை விட்டு இறங்கி விட்டதும் நீங்களும் பேருந்தும் தனித்தனியாக பிரிக்கப்பட்டு விடுகிறீர்கள்...அதன்பிறகு அதன்மீது ஓர் அந்நியத்தன்மை வந்து விடுகிறது. பிறகு வேறு வாகனத்தில் பயணம் செய்யும் போது இதே வாகனத்தையும் ஓட்டுநரையும் கூட நீங்கள் திட்டக்கூடும். அப்போது இந்த வாகனத்தை நீங்கள் அடையாளமும் நினைவும் வைத்திருப்பீர்களா என்று கூட தெரியாது...

மதம், தேசம் போன்ற கற்பிதங்களின் மீது நாம் வைக்கும் பற்றும் இவ்வாறே மிக மிக தற்காலிகமானது. இந்தப் புரிதல் இருந்தால் யாரையும் எதையும் வெறுக்கவோ வன்மம் கொள்ளவோ தோன்றாது. – **சுரேஷ் கண்ணன்**

## வெள்ளி நற்சிந்தனை...



# இளமையிலேயே ஆன்மீகம்

"ஆன்மீக விஷயங்கள் ரிட்டையர் ஆன பிறகு கவனிக்க வேண்டிய ஒன்று" என்று, பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட விவேகமற்ற செயல், வேறு எதுவும் இருக்க முடியாது. ஓய்வுக்குப்பின்னர் ஒருவன் உயிர் வாழப்போகிறான் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? வாழ்நாளே குறுகியது. அதில் சரிபாதி நேரத்தை தூங்கிக் கழித்து விடுகிறோம்.

வாழ்க்கையின் பெரும் பகுதி குழந்தைப்பருவமாகவும் சிறுவயதுப் பிராயமாகவும் கழிந்து விடுகிறது. போதாக்குறைக்கு நோய் நொடியால் சிறிது காலம் வீணாகிறது. இதையெல்லாம் கழித்து விட்டுப் பார்த்தால், வாழ்நாள் என்பது மிகவும் சொற்பமே! அதனால் தான் பெரியவர்கள் ஆன்மீகத்தை அன்றாட வாழ்க்கையின் ஒருபகுதி ஆக்கிவிட வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

இளமையில் கல்வி கற்க வேண்டும் என்பதைப் போலவே பக்தி உணர்வையும் இளமைப் பருவத்திலேயே குழந்தையிடம் ஏற்படுத்தி விட வேண்டும். ஏனெனில், இளமைப் பிராயத்தில் ஊற்றப்படும் விதைகள் தான் நல்ல பலனை விரைந்து அளிக்கின்றன. வயதாகும் போது, வாழ்க்கைப் பிரச்சினைகள் அதிகமாகி விடுவதால், பக்தி உணர்வை அப்போது முளைவிட்ச் செய்வது கடினம்.

நமது நாட்டில் ஆன்மீக வளர்ச்சிக்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்து மதத்தின் வளர்ச்சிக்கும், இளம் வயதில் சமய உணர்வை ஏற்படுத்துவதாகவும் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அநேக பாடசாலைகள் மாணவர்கள் வரவின்றி நடைபெறுவதில்லை. பெற்றோர் இது விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். மனிதனை வாழும் நெறியில் வாழ வைப்பதற்கு சமய உணர்வு அவசியமாகும்.

இன்று இளம் வயதினரிடையே ஏற்பட்டு வரும் ஒழுக்கப்பிறழ்வுக்கு காரணம் அவர்களிடையே சமயச் சிந்தனை இல்லாததுதான்! அறநெறிப் பாடசாலைகள் சிறப்பாக இயங்குவதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமய நிறுவனங்கள் முயற்சி செய்யவேண்டும்.

இளமைப் பருவம் பக்தியில் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு பிரகலாதனின் வாழ்க்கை ஒரு சாட்சியமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. நாராயணன் மீது கொண்ட பக்தி, தந்தை இரணியனுக்கு கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதையும், அவனின்றி ஒரு அணுவும் அசையாது எனும உண்மையினையும் அறியச் செய்தது. இரணியன், மகன் என்றும் பாராமல் செய்த தீமைகளை, துன்பங்களை "பக்தி வைராக்கியம்" கொண்டு பிரகலாதனினால் வெற்றி கொள்ள முடிந்தது.

இளமையிலேயே ஆன்மீகம் அறிந்து வாழ்வை, வளப்படுத்த முயலுங்கள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# தனியார் பல்கலையை நிறுவுவதற்கு வர்த்தமானி அறிவிப்பிற்கு அங்கீகாரம்

இலங்கையில் முதலாவது தனியார் பல்லைக்கழக வளாகத்தை நிறுவ வகை செய்யும் வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்றம் நேற்று முன்தினம் அங்கீகரித்தது.

இதன்படி ஐக்கிய இராச்சியத்தின் மத்திய லங்னாஷயர் பல்கலைக்கழகத்தின் வளாகம் மீரிகமவில் அமையவுள்ளது.

இளவரசர் சாள்ஸ் பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் போது இந்தப் புதிய பல்கலைக்கழக வளாகத்திற்கான அடிக்கல்லை நாட்டவுள்ளார்.

இந்த வளாகம் மீரிகமவில் 120 ஏக்கர் காணியில் தந்திரோபாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமையவுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மீதான விவாதத்தை தொடக்கிவைத்த முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இந்தத் திட்டத்தில் 120 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்படுமென கூறினார்.

இந்த வளாகத்தில் 10,000 மாணவர்கள் கல்வி கற்க முடியுமெனஅவர் கூறினார்.

வெளிநாட்டுக்கல்விக்காக வருடம் தோறும் 16,500 மாணவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். இதனால் அந்நியச் செலவாணி ஒதுக்கத்தில் பெரும் நெருக்கடி ஏற்படுகிறது என அவர் கூறினார்.

இந்தப் பல்கலைக்கழகம் ஐக்கிய இராச்சியத்தில் 5ஆம் இடத்தில் உள்ளது. இதில் 35,000 மாணவர்கள் உள்ளனர். இதன் வளாகங்கள் சைப்பிரஸ் சீனா ஆகிய நாடுகளிலும் அமைந்துள்ள தென்றும் அவர் கூறினார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் அமைவதை ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கவுள்ளது ஆயினும், உயர்கல்வி அமைச்சின் கண்காணிப்பின்கீழ் இவை இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்தப் பல்கலைக்கழகத்தை முதலீட்டு சபையின்கீழ் அமைப்பதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கின்றதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அகிலவிராஜ் காரியவாசம் தெரிவித்தார்.

# முன்னாள் போராளிகளுக்கு தொழிற்பயிற்சி சான்றிதழ்

மேசன் தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 133 பேருக்கு சான்றிதழ் மற்றும் தொழில் சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, புனர்வாழ்வு நிலையஙகளில் கடந்த காலங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளுக்கு வவுனியா தொழிற்பயிற்சிக் கல்லூரி மூலம் மேசன் வேலை பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

குறித்த பயிற்சி நெறியை பூரணமாக கற்று சித்தியடைந்த 133 முன்னாள் போராளிகளுக்கு தொழில் செய்வதற்கான உபகரணங்களும், பயிற்சி நிறைவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி மேஜர் நாமல் திலகரட்ன, வவுனியா இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர், வவுனியா தொழிற் பயிற்சிக் கல்லூரி அதிபர், நைற்றா நிறுவன அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பணிப்பெண்களாக சென்றவர்களில் 463 பேர் சடலங்களாக வந்த அவலம்

## ஐ.தே.க தெரிவிப்பு



பணிப்பெண்களாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களில் 463 பேர் கடந்த வருடத்தில் சடலங்களாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் . இவர்களில் 300 இற்கும் அதிகமானோர் 30 வயதுக்கும் குறைவானவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. யான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார் .

அவர் மேலும் கூறுகையில் ,

சட்டங்களும் கட்டுப்பாடுகளும் மீறப்பட்ட நிலையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வோர் அங்கு பல்வேறு கொடுமைகளையும் சித்திரவதைகளையும் அனுபவிக்கின்றனர் .

இதேவேளை , 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 463 பணிப்பெண்களின் சடலங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன . இவற்றில் 300 இற்கும் அதிகமானவை 30 வயதுக்கும் குறைவான பெண்களுடையதாகும் . இவர்கள் மாரடைப்பின் காரணத்தினாலேயே மரணித்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது

இவ்வாறு பணிப்பெண்களாக செல்வோர் உடலளவில் ஆரோக்கியமானவர்கள் என்ற மருத்துவ சான்றிதழும் வழங்கப்படுகின்றது . நிலைமை இவ்வாறிருக்கும் போது எப்படி இவ்வளவு பெ[illegible] தொகையினர் மாரடைப்பால் மரணிக்க முடியும் ?

இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற உடல்களில் காயங்கள் காணப்படுகின்ற அதேவேளை உடலின் சில உறுப்புகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது . எனவே இது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் . அத்துடன் பணிப்பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார் .

# செஞ்சிலுவையினால் மரநடுகைத்திட்டம்

காலநிலை மாற்றத்தினை கருத்திற்கொண்டு தேசிய ரீதியாக இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்படும்மரநடுகை தினத்தை முன் னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மரங்கள் நடத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை யினரால் ஐந்து பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பாடசாலைகளில் இம் மரநடுகைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக கமுகு , மா , பலா , தேக்கு , வேம்பு ஆகிய மரங்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# டிப்ளோமா பாட தரத்தினை ஒருமுகப்படுத்த செயற்திட்டம்

நாட்டில் காணப்படும் டிப்ளோமா, உயர் டிப்ளோமா உள்ளிட்ட சில பாடநெறிகளின் தரத்தினை, ஒரு முறைமையின் கீழ் கொண்டுவருவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக சர்வதேச தரத்திற்கு அமைய தகைமைகள் சில நிர்ணயிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாட்டு பல்கலைக்கழக கல்வியின் மூலம் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் பெறுபேறுகளை உள்நாட்டு பல்கலைக்கழகமொன்றின் பாடநெறிக்கு வழங்கப்படும் தகுதிக்கு சமமாக கருத்திற் கொள்ளும் வகையில் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதனை, உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றின் சான்றிதழை பெற்றுக்கொண்ட ஒருவருக்கான சந்தர்ப்பங்கள் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பதை கண்டறியும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன மேலும் தெரிவித்தார்

# முல்லை மாணவியின் மனு 15 ஆம் திகதி தீர்ப்பு

பல்வைத்திய பட்டப்படிப்புக்கு அனுமதி மறுக்கப்பட்ட முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவியால் தாக்கல் செய்யப்பட்ட ஆணை கோரும் மனு மீதான தீர்ப்பு ஒக்ரோபர் 15 ஆம் திகதி வழங்கப்படும் என்று மேன்முறை யீட்டு நீதிமன்றம் நேற்று முன் தினம்அறிவித்தது.

தனக்கு பல்கலைக்கழகத்தில் கிடைக்க வேண்டிய இடத்தை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியதாக மனுதாரர் முறையிட்டுள்ளார்.

மனுதாரர் அனுஜா யோகநாதன் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் மேலதிக செயலாளர் கலாநிதி பிரியங்க பிரேமகுமார மற்றும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற பரீட்சார்த்தி வி.ஜயவதனி ஆகியோரை பிரதிவாதிகளாக காட்டியுள்ளார்.

கௌரிசங்கரி தவராசாவினால் நெறிப்படுத்தப்பட்டு சட்டத்தரணி றியாட் அமீக் மனுதாரர் சார்பில் தோன்றினார்.முல்லைத்தீவு நகரம் அரச கட்டுப்பாட்டில் வந்தபோது தான் 1989 ஆம் ஆண்டு அங்கு பிறந்ததாக மனுதாரர் கூறியுள்ளார்.

# பார்வையற்றவர்களுக்கு உலருணவுப்பொதிகள்

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டில் இயங்கிவரும் எழுகை நிறுவனத்தினால் பார்வையற்றோர்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் அதன் கீழ் உள்ள பார்வையற்றவர்களுக்கான பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன

அந்த வகையில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் இயங்கி வரும் எழுகை நிறுவனத்தின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு ந[illegible] பெற்றுள்ளது .

கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ரூபகரன் தலைமையில் நிகழ்வு நடைபெறறுள்ளது . நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் , அருட்தந்தை றிச்சட் ஆகியோர் கலந்து கொண்டு உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர் .

மேற்படி நிகழ்வு ஏ -9 வீதி , கிளிநொச்சி பரந்தன் சந்தியில் அமைந்துள்ள பார்வையற்றோர் சங்க மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.





யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில்கடந்த வியாழக்கிழமை ஆசிரியர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்படுவதையும் அதன் பின் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் மாணவி ஒருவரின் நடன நிகழ்வையும் காணலாம்.

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

ஆங்கிலம்

பகுதி - I - II

2 மணி



**TEST 01**

**Fill in the blanks in the following text. Use words form the box. The first one is done for you.**

**I, mine, me, myself, my**

1) ..... My mother presented (2) .................. a bicycle on (3) .................... birthday.

4) .................... was so happy that rode it the whole day. My Friend, Nimal also has an old bicycle.

(5) .......................... . is a new one. One day, there was a puncture in it and I repaired it.

**TEST 02**

**Find required information from the invitation and fill the blanks.**

> **Madya Maha Vidalaya - Anuradhapura T.P 025 -2265337**
>
> **Dear Principal**
> Our \Annual Prefects' day' will be held on 16th January 2013 at the school auditorium from 8.30 a.m. to 3.30 p.m.
> We cordially invite ten prefects of your school for this function.
> Confirm your participation before 10th January 2013.
>
> **Thank you,**
> **Upul Galagedara**
> **Head Prefect**
> **Kekirawa M.M.V.**

(1) Function : -------------------
(2) Date of the function : -------------------
(3) Time : -------------------
(4) Venue : -------------------
(5) Invitees : -------------------
(6) Sender of the invitation : -------------------

**TEST 03**

**Fill in the blanks in the following text using the words given in the box.**

**water, paddy, town, helpful, fruits, before, small, tank, happy, chance**

I went to Anuradhapura to see my (1) grandparents last vacation. They live in a (2) ------------------------------ village near Anuradhapura (3) ---------------- There is a large tank in this village. This tank provides (4) ------------ to the (5) ------------------------ fields around. The people in the village were very (6) -------- and kind to me. They me some wild flowers and (7) ------------------------ which I had never seen or tasted (8) -------------------- I had a (9) ---------- to have a bath in the (10) ------------------ and it made me so (11) -------------- and excited.

**TEST 04**

**Fimd the missing information from the box about the following historical places in Sri Lanka.**

| | | |
|---|---|---|
| **hot and dry** | **North Central** | **Tisawewa** |
| **about 175 kms** | **historical place** | **Agriculture** |
| **Anuradhapura** | **Srimahobodhi** | **Ruwanweliseya** |
| **wilputtu** | | |

1. Place : ------------------------
2. Province : ------------------------
3. Importance : ------------------------
4. Religious : ------------------------
5. Climate : ------------------------
6. How far from Colombo : ------------------------
7. Tank located : ------------------------
8. Game park in the district : ------------------------
9. Famous Dagaba : ------------------------
10. Main occupation in tha area : ------------------------

**TEST 05**

**Write a paragraph on one of the following. Use about 50 words.**

(1) My pet (2) My favourite story book (3) My favourite teledrama

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

**TEST 06**

**Read the following text and answer the questions below.**

Sports and games prepare students for the future work place. In addition to the lesson they learn in the class room, such as discipline and unselfishness, they gain experiences in the playground. One of the most important tasks a child needs in to prepare for the life outside home. It is what the student do in their free time that really prepares them to take their place in society as citizens when they grow up. Instead of working their own benefit, sports and games teach them how to work as a team. This training enables the younger generation to work for the country at a later stage. Another important lesson, a child must learn is how to overcome fears of failure.

1) What prepares students for the future work place?
------------------------------------------------------------

2) What do they ain in the playground?
------------------------------------------------------------

3) "Sports and games develop team spirit" write down the sentences which give the above idea.
------------------------------------------------------------

4) Write down two adjectives from the text.
1) ------------------ 2) ------------------------

5) What refers. i) "They" in line 2. --------------------
ii) "It" in line 3. --------------------

**TEST 07**

**As the monitor of your class, you want to keep the classroom clean and beautiful. Write down five instructions to be followed.**

Example : Sweep the classroom daily.

1) ------------------------------------------------------------
2) ------------------------------------------------------------
3) ------------------------------------------------------------
4) ------------------------------------------------------------
5) ------------------------------------------------------------

Write on one of the following. Use about 100 wards.
How I spent my last weekend
Our School Sports meet
School Holidays

**TEST 08**

**Read the following text and fill in the blanks using the words given in the box.**

**have, are, has, could, had, is**

I ------------------------ many friends both in my village and at school. But among them Dinesh (2) ------------------------ the best. Dinesh (3) -------------------- good qualities that I admire most. This year we (4) ---------------------- in the same class, but we (5) ------------------------ no chance to be together when we were in Grade 10. Even then we (6) ------------------------ meet each other every day.

Fill in the following blanks using correct forms of the verbs given in the brackets.

I (1) ------------------------ (born) in the city of York in the year 1632. When I was still a boy, I (2) ------------------------ (want) a young man. Then some friends asked me (4) ------------------------ (go) sea with them. I went without (5) ------------------------ (ask) my father, trusting in God (help) me, I went to sea. Our ship was a small one, carrying fifteen men.

Fill in the blanks correctly. The blanks are numbered. Insert the correct number into the box next to each of the following words.

One day Andare and (1) ------------------------ wife had a quarrel (2) ------------------------ wife chased him out (3) ------------------------ the house and locked (4) ------------------------ door. I am going to (5) ------------------------ into the well should (6) ------------------------ and ran into the (7) ------------------------ In the dark he (8) ------------------------ up a huge stone (9) ------------------------ threw it into the (10) ------------------------ on hearing the noise, his wife came out weeping and Andare ran back into the house laughing.

| | | | |
|---|---|---|---|
| a) Jump | ☐ | f) the | ☐ |
| b) Andare's | ☐ | g) picked | ☐ |
| c) Andare | ☐ | h) and | ☐ |
| d) Of | ☐ | i) well | ☐ |
| e) garden | ☐ | j) his | ☐ |

**TEST 09**

**Turn the following sentences into Passive vioce. The first one is done for you.**

1) He must finish the works before 2 O'Clock.
The work must be finished by him before 2 O'Clock

2) They will publish the advertisement
------------------------------------------------------------

3) He has sent the application to the university
------------------------------------------------------------

4) Sha Jahan built the Taj Mahal in Agra.

----------------------------------------------------------------------------

5) She has writeen many poems on rural life.

----------------------------------------------------------------------------

6) Farmeru cultivate rice in the dry zone.

----------------------------------------------------------------------------

**TEST 10**

**Fill in the blanks in the following text using the words given in the box below.**

**threat, unclean, important, threat, economical, people, polythene, empty, recycling, roads, undecaying, environment, resources**

Today polythene has turned out to be a (1) ----------------------- to the environment especially in our country. (2) ----------------------- doesn't decay or blend with soil. the polythene that is thrown away by the (3) ----------------------- remains for a long time, making the environment (4) ----------------------- Apart from this, (5) -- --------------------- cans, broken bottles and kitchen refuse are put on the roads, making the (6) ----------------------- and the entire (7) ----------------------- not only dirth but also foul smelling.

There are two (8) ---------------------- reasons for the need to recycle. The first reason is to prevent the environment from being polluted by the (9) ---------------- ------- Materials. The second important reason is that (10) ----------------------- Saves the natural (11) ----------------------- and it is economical too.

**TEST 11**

**Write on one of the following. Use about 100 words.**

a. Write a letter to friend inviting him / her to spend a few days with you after the examination.

- Talk about what you could do. For example : go on a trip
- Ask about what he / she likes / dislikes.
- Remind him / her to bring - camera, books, etc.

b. Science Socity of your school wishes to visit the Victoria Dam of the Mahaweli scheme. Write a letter to the Director General, Mahaveli Authority asking for permission to visit the place. Give the following details.

- Date and time of the visit
- Number of students and teachers participating
- How long you are going to spend there
- Request the services of an officer to explain about the Dam

----------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------

**TEST 12**

**Read the following text and answer the questions given below.**

Even though we had heard of it before, it was only during last school holidays that we thought of visiting my grandparents' house in the dry zone. We were wondering where we should go during the holidays when father suggested we could visit 'Bird's Nest.

Bird's Nest is the wattle and daub hut with a straw foof where my grandparents had lived for a good part of their lives. They were two of the first teachers to teach in school in the dry zone, and they had built the hut, when they first started teaching, so many years ago.

We set off on a Saturday, and after travelling for miles and miles, reached the house, now looked after by uncle Piyasome, a neighbor.

'There! That's 'bird's Nest' - no water of electricity. We carried water from the well in tha garden and when it grew dark lit the kerosene lamps.

That night, we slept outside, with the sky as the roof, listening to the hooting owls, it was very cool and comfortable.

'With no T.V. or radio how did you spend your free time' I asked my father before I fell asleep.

'We played games, related stories and read books, 'said father.
'But you didn't have electricity' I reminded him.
'These kerosene lamps gave enough light for everything we did. 'Father said.
He was happy reliving his childhood.
it was the best holoday of my life.

1) When did the writer first visit his grandparent's house?

----------------------------------------------------

2) Write the name that given to the house?

----------------------------------------------------

3) Where had the writer's grandparents taught?

----------------------------------------------------

4) Write two things that the writer's father did spend him free time.

i) ------------------------------

ii) ------------------------------

**TEST 13**

**5) Underline the correct answer.**

They slept

a. inside the tow small rooms.

b. with sky as a roof

c. with piyasome, a neighbour

6) Write th sentences from the text that says sleeping outdoor was quite good.

----------------------------------------------------------------------------

7) Who was happy reliving his childhood?

----------------------------------------------------------------------------

8) Find words from the text which have the same meaning as the following

a) gave a idea : ---------------------------------

b) shining with light :---------------------------------

**TEST 14**

**Write on one of the following. Use about 200 words.**

a. Write an article to the Junior Page of a newspaper on Water - our life blood. include the following.

- uses of water
- problems with water - floods
  - drought
- need to - protect waterways
  - manage water, minimize waste

b. Write a speech to be made at your school assembly on A healthy mind in a healthy body.

include the following:

- eating a balanced diet - (what a balanced diet is)
- exercise (walking / running etc.)
- mental happiness (though helping other, be free of worries)

c. Complete the followig story.

It was a rainy day. I was in bed reading a book. Suddenly the light wet off. I went to the window and looked out.--------------------------------

d. An interesting incident that I can never forget.

**TEST 15**

**The following are five students expressing how they help their parents during school vacations. Write their expressions in reported speech. The first one is done for you.**



Priya

I help my mother in cooking.

1) Priya says that she helps her mother in cooking

2) ................................

3) ................................



Shanthi

I keep the house clean.



Gamini

I help my father in his garage.

4) ..................

I wash all my clothes my self.



Nelum

5) ..................

I make tea for all, in the morning.



Fathima

6) ..................

I do shopping for my family.



Kumar

**TEST 16**

**The following extract contains 10 mistakes which are underlined. Write each correct word in the box provided. First one is done for you.**

Once upon a time, a long time ago, (1) their (there) was a knight, who as he (2) grow [ ] older lost all his (3) hairs [ ] He (4) become [ ] a s bald as (5) a [ ] agg. He (6) don't [ ] want any one to see his bald head. So he (7) buy. [ ] a beautiful, black (8) curl [ ] wig.

# வேலணையில் குடிநீர் தட்டுப்பாடு நிவர்த்தி செய்ய நடவடிக்கை

(வேலணை)

தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு, வேலணை, சரவணை, மண்டைதீவு ஆகிய இடங்களில் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் நிலவுகின்ற கடும் வறட்சியினால் இப்பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டதூரம் அலைந்து திரிவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக இப்பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்கள் தண்ணீர்க் குடங்களுடன் அதிக தூரத்திற்கு நடந்து சென்று குடிநீரைப் பெற்று வருகின்றனர்.

இந்நிலையினைக் கருத்திற் கொண்டு இம்மக்களின் குடிநீர்த் தேவையினைப் பூர்த்தி செய்யுமாறு வேலணைப் பிரதேச செயலர் திருமதி . மஞ்சுளா தேவி சதீஷன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

இதற்கமைய கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை யிலிருந்து வேலணை, சாட்டி போன்ற இடங்களிலிருந்து பவுசர்கள் மூலம் குடிநீரை எடுத்துச் சென்று இம்மக்களுக்கு வழங்குவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் நான்கு அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்களுக்கு 4 கலன் குடிநீரும், ஆறு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 6 கலன் குடிநீரையும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்வதற்காக "வேள்ட் விஷன்" நிறுவனம் சுமார் 6 ஆயிரம் லீற்றர் தண்ணீரை எடுத்துச் செல்லக் கூடிய பவுசர் ஒன்றினையும் வேலணைப் பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகமும் சமூகப் பொறுப்புணர்வும் கிளிநொச்சியில் செயலமர்வு

(கிளிநொச்சி)

ஊடகமும் சமூகப் பொறுப்புணர்வும்" எனும் தொனிப் பொருளிலான ஊடகப் பயிற்சிச் செயலமர்வு ஒன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கென பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ள இந்த ஊடகச் செயலமர்வு நாளை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் கிளிநொச்சி கனகபுரத்தில் உள்ள பிறன்ஸ் சிப் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

செய்தி மற்றும் தகவல் சேகரித்தல், பத்திரிகை துறை சார் ஒழுக்க நெறிக்கோவை ஆகிய விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறையினருக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவை தொடர்பாக ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கும் இடையில் இணைப்பை பயன்படுத்தி அதன் ஊடாக செயற்பாட்டில் தவறுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் வழிகாட்டல்களைச் செய்வது என்பதே இச்செயலமர்வின் முக்கிய நோக்கமாகும்.

# ஆயுர்வேத வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் சிரமம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபையின் உப பணிமனையின் கீழ் உள்ள கண்டாவளை, முரசுமோட்டை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருத்துவர் எவரும் இதுவரை நியமிக்கப்படாமையினால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலகமான முரசுமோட்டை அலுவலகத்தில் இயங்கிவரும் ஆயுர்வேத வைத்தியசாலையில் வைத்தியர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதனால் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டிய ஊரியான் கிராமத்தில் உள்ள 275 வரையான குடும்பங்களும் முரசுமோட்டை கிராமத்தில் உள்ள 286 வரையான குடும்பங்களும், கோரக்கன் கட்டு கிராமத்தில் உள்ள 340 வரையான குடும்பங்களும் ஏனைய கண்டாவளை, புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களில் உள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது சிகிச்சை பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தினை கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தண்டப்பணம் விதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பகுதியில் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமில்லாமல், பதிவுகளில்லாத படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 8 மீனவர்களுக்கு ரூபா 56000 ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், சட்டவிரோத வலைகளை அழித்துவிடுமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் இவ்வழக்கு கடந்த 8 ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (170)

# மன்னாரில் முதற்தடவையாக வடமாகாண ஆங்கில தினப் போட்டி

வடமாகாண ஆங்கில தினப் போட்டி முதல் தடவையாக இம்முறை மன்னாரில் இடம் பெறுவதாக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம். எம். சியான் தெரிவித்தார்.

வட மாகாண ஆங்கில தினப் போட்டி நேற்றுக் காலை மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் ஆரம்பமாகியது.

குறித்த போட்டி நாளை வரையிலான மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது. வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களையும் உள்ளடக்கியதாக இடம்பெறும் குறித்த போட்டியில் 400 பாடசாலைகளைச் சேர்ந்த 4 ஆயிரம் போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளதாக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதன் போது விருந்தினர்களாக மன்னார் மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் என் பரமதாஸ், வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கில மொழிக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் சோமஸ்கந்தராஜா, மன்னார் நகர முதல்வர் . எஸ் ஞானப்பிரகாசம் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம் சியான் மற்றும் வலய கல்விப்பணிமனையைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது ஆங்கில மொழி மூலமான 11 நிகழ்வுகளும் இடம்பெற்றது.

## சுனாமி ஒத்திகை நிகழ்வு

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் உள்ள காரைநகர் வடகிழக்கு பிரதேசத்தில் ஜே/47 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று பி.ப 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. இதுதொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறு இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# உலக அஞ்சல் தின நிகழ்வுகள்

## நயினாதீவு



உலக அஞ்சல் தினமானது நேற்று முன்தினம் நயினாதீவு அஞ்சலகத்தில் பொறுப்பு அஞ்சலதிபர் பு.சுகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நயினாதீவு முன்பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் அஞ்சலகத்தினால் உண்டியல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## ஒட்டுசுட்டான்



ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகத்திலும் நேற்று முன் தினம் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. காலை 9.30 மணிக்கு அஞ்சல் அதிபர் ரு டீ.குலரட்ன தலைமையில் நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொது மக்கள், அஞ்சலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து பொது மக்களுக்கு விசேட பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன

## பூநகரி



பூநகரி பல்லவராயன் கட்டு உப.அஞ்சல் அலுவலகத்திலும் நேற்று முன்தினம் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. காலை 9.30 மணிக்கு உப அஞ்சல் அதிபர் க.சிவதீபன் தலைமையில் மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொதுமக்கள், அஞ்சலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு விசேட பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன

# ஆரோக்கிய வாழ்வு கலந்துரையாடல்

இணுவில் அறிவாலயம் நடத்தும் நீரிழிவு நோய்க்கு முகம் கொடுக்கும் வழிமுறைகள் பற்றிய ஆரோக்கிய வாழ்வுக் கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அ.குகதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் வணிகபீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொள்வதுடன் வைத்திய கலாநிதிகளான ஜே.மகாதேவா, திருமதி கஜந்தினி முருகஜெயபாலன், செல்வி எழினி நாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு வைத்திய பரிசோதனை மேற்கொண்டு ஆலோசனைகளும் வழங்குவர்.

வைத்திய பரிசோதனை சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறவுள்ளது. இணுவில் அரிமாக்கழகத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (10)

# பொருளாதார வளர்ச்சி குறித்த ஐ.எம்.எப் இன் கணிப்பு தவறு

## அறிக்கையை மறுக்கிறது இந்தியா

(டில்லி)

இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி இந்த ஆண்டு 3.75 சதவீதம்தான் இருக்கும் என்ற ஐ.எம்.எப்.பின் கணிப்பை மறுத்துள்ளது இந்தியா. இந்த ஆண்டு 5 சதவீதம் வரை வளர்ச்சி இருக்கும் என மத்திய தொழில் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறியுள்ளார். திட்டக்குழுவும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி 3.75 சதவீதம் மட்டுமே என சர்வதேச நிதி அமைப்பான ஐ.எம்.எப். கணித்துள்ளது. இந்தியாவின் பல துறைகளிலும் வளர்ச்சிப் போக்கு தடைபட்டுள்ளதால் இப்படிக் கணித்துள்ளதாக காரணம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 8 சதவீதத்திலிருந்து இந்த ஆண்டு 5 சதவீதமாகக் குறைந்துள்ளதையும் ஐ.எம்.எப். குறிப்பிட்டுள்ளது. ஆனால் இதனை மத்திய தொழில துறை அமைச்சர் ஆனந்த் சர்மா மறுத்துள்ளார். பல துறைகளிலும் மீட்சிப் போக்கு காணப்படுவதால், இந்த ஆண்டு 5.1 சதவீத வளர்ச்சி இருக்கும் என அவர் தெரிவித்தார். இந்தியாவின் ஏற்றுமதி 11.5 சதவீதமாகவும், இறக்குமதி 18 சதவீதமாகவும் குறைந்துள்ளதை ஆனந்த் சர்மா குறிப்பிட்டுள்ளார். இந்திய திட்டக் கமிஷனும் ஐ.எம்.எப்.பின் கணிப்பை நிராகரித்துள்ளது.

## – பொருளாதார நெருக்கடி –

# தலிபானின் கிண்டலுக்கு ஆளானது அமெரிக்கா




பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அமெரிக்காவை, தலிபான்கள் கிண்டல் செய்து அறிக்கை விடுத்துள்ளனர். சொந்த மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள குற்றவாளிகள் என அமெரிக்க அரசியல்வாதிகளை விமர்சித்துள்ளனர். இது தொடர்பாக தலிபான்கள் விடுத்துள்ள அறிக்கையில் அமெரிக்க நிறுவனங்கள் ஆட்டம் கண்டுள்ளன. அந்நாட்டில் உள்ள சுதந்திர தேவி சிலை மூடப்பட்டுவிட்டது. சுற்றுலாப்பயணிகள் வருகை குறைவால் வோஷிங்டனில் கடைகள், விடுதிகள், ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தங்களின் சொந்த நலன்களுக்காக கடைநிலை மக்களையும், ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கு எதிராகவும் அமெரிக்க அரசியல்வாதிகள் நிகழ்த்தும் விளையாட்டை, அந்நாட்டு மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

# கடத்தப்பட்ட லிபிய பிரதமர் சிலமணிநேரத்தில் விடுதலை

உலகச் செய்திகள்

(திரிபோலி)



ஹோட்டலில் தங்கியிருந்த வேளை லிபிய நாட்டு பிரதமரை கடத்திய மர்ம நபர்கள் சிலமணிநேரத்தில் விடுதலை செய்துள்ளனர்.

லிபியாவின் பிரதமராக இருப்பவர் அலி ஷிடான். இவர் தலைநகர் திரிபோலியில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார். அப்போது அங்கு மர்ம நபர்கள் சிலர் வந்தனர். பின்னர் துப்பாக்கி முனையில் மிரட்டி அவரை அங்கிருந்து கடத்திச் சென்று விட்டனர்.

இந்த தகவலை அரபு நாடுகளை சேர்ந்த தொலைக்காட்சிகள் செய்தியாக நேற்று வெளியிட்டன. பிரதமர் அலிஷிடான் பி.பி.சிக்கு நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் லிபிய தீவிரவாதிகளுக்கு மேற்கத்திய நாடுகள் உதவக்கூடாது எனக் கோரிக்கை விடுத்தார். இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் அவரைக் கடத்தி பின்னர் விடுவித்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

# எரிபொருள் சிக்கனத்தை வலியுறுத்தி ரயிலில் பயணித்தார் அமைச்சர்

எரிபொருள் சிக்கனம் மிக அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தி, இந்திய மத்திய பெட்றோலியத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி நேற்று முன்தினம் புது டில்லியில் மெட்ரோ ரயிலில் பயணித்தார்.



நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும் பெற்றோலிய பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த "எரி பொருள் சிக்கனம்" மிக அவசியம் என்ற கருத்தை பல சந்தர்ப்பங்களிலும் தொடர்ந்து தெரிவித்து வந்தார் வீரப்ப மொய்லி.

கடந்த மாதம் "எரிபொருள் சிக்கனம்" குறித்து பேசும்போது அவரும்,அவரது அலுவலக ஊழியர்களும் வாரம் ஒரு முறை புதன்கிழமை தோறும் மெட்ரோ ரயில் போன்ற பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்தப் போவதாக அறிவித்தார். அவரது அறிவிப்புப்படி நேற்றுக்காலை அலுவலகத்திற்கு கிளம்பிய அவர் வீட்டிற்கு அருகில் இருக்கும் மெட்ரோ நிலையத்திற்கு சென்று அங்கிருந்து ரயிலில் ஏறி, அவரது அலுவலகத்திற்கு அருகில் அமைந்துள்ள சென்ட்ரல் செக்ரடேரியட் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து அலுவலகத் திற்கும் நடந்தே சென்றார்.

மெட்ரோ ரயில் பயணத்தை முடித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் டமும் வாரம் ஒரு முறை பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த தான் கேட்டுக்கொண்டுள்ளதாக கூறினார்.

அரச அலுவலகங்களிலும் அனைத்து ஊழியர்களுக்கும், வாரம் ஒரு முறை பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த அறிவுறுத்தி சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பியுள்ளதாகவும், கடைபிடிக்கத் தவறினால் இதற்காக தண்டனை ஒன்றையும் வழங்க முடியாவிட்டாலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இது அமையும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

# கர்ப்பமாக இருந்த டயானாவை அரச வம்சமே கொலை செய்தது

## அலன்பவரின் புத்தகத்தில் விபரிப்பு



இங்கிலாந்து இளவரசர் சார்லசை காதல் திருமணம் செய்து கொண்டவர் டயானா. இவர்களுக்கு வில்லியம், ஹரி என இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். சார்லசுடன் வாழ்ந்த போதே தான் வேறொருவரைக் காதலிப்பதாக அறிவித்தார் டயானா.

இங்கிலாந்து ராஜ குடும்பத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த அறிவிப்பால், டயானாவை விவாகரத்து செய்துவிடும்படி சார்லசை ராணி எலிசபெத் வற்புறுத்தினார்.

இந்நிலையில் கடந்த 1997 ஆம் ஆண்டு காதலர் டோடி பயீத்துடன் பாரீஸ் நகரில் காரில் சென்ற போது தங்களை புகைப்படம் எடுக்க துரத்தி வந்த பத்திரிகையாளர்களிடம் இருந்து தப்பிக்க காரை வேகமாக ஓட்டும்படி சாரதிக்கு டயானா உத்தரவிட்டார். சுரங்கப்பாதை வழியாகச்சென்ற கார் பக்கச்சுவரில் மோதியதால் டயானா - டோடி பயீத் இருவருமே விபத்தில் சிக்கி பலியாகினர்.

ஏற்கனவே, கடந்த மாதம் முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் இங்கிலாந்தின் உள்வுத் துறையின் இரகசிய ஏற்பாட்டின் படி, அரச குடும்பம் தான் டயானாவை கொன்று விட்டது என குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், அலன் பவர் என்பவர் டயானாவின் மர்ம மரணம் தொடர்பாக புதிய புத்தகம் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அதில், விபத்தில் சிக்கிய டயானாவை பாரிசில் உள்ள பிட்டி - சல்பெட்ரியர் ஆஸ்பத்திரிக்கு தூக்கி வந்தபோது அவரது வயிற்றை "எக்ஸ்-ரே" எடுத்துப் பார்த்த டாக்டர் எலிசபத் டயான் மற்றும் செவிலிப் பெண் ஒருவர் வயிற்றினுள் 6 - 10 வார கருவினை கண்டதாகவும், இத்தகவல் ஆஸ்பத்திரி குறிப்பேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், அரச குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்றவே எம்-16 உளவாளிகளை ஏவி இங்கிலாந்து அரண்மனை டயானாவைக் கௌரவக்கொலை செய்து விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கர்ப்பமாக இருந்த டயானாவின் வயிறு வெளியே தெரியாதபடி, டயானாவின் பிணத்தை தைலத்தில் போட்டு டோடி பயீத்தின் குழந்தை அவரது கருவில் வளரும் இரகசியத்தை இங்கிலாந்து அரச வம்சத்தினர் மறைத்து விட்டதாகவும் அலன் பவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# விலகமாட்டார் சோனியா



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வரும் 2016 ஆம் ஆண்டில் தனக்கு 70 வயது ஆகும் போது அரசியலில் இருந்து ஓய்வுபெற விரும்புவதாகவும், இதனால்தான் ராகுல் காந்திக்கு கட்சியில் மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் ஒரு புத்தகத்தில் தகவல் வெளியாகி இருந்தது. ஆனால் இந்தக் கருத்தை காங்கிரஸ் மறுத்துள்ளது. இதுபற்றி அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் பி.சி.சாக்கோ கூறுகையில் நான் அந்த செய்தியை படிக்கவில்லை. செயல்திறன்மிக்க சோனியா காந்தி தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர். எனவேஅவர் அரசியலிலிருந்து விலகுவாரென எவரும் எதிர்பார்க்கக் கூடாது எனத் தெரிவித்தார்.



தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கக் கூடாதெனத் தெரிவித்து உண்ணாவிரதமிருந்த ஜெகன்மோகன்ரெட்டியை பலவந்தமாக மருத்துவமனைக்கு தூக்கிச்செல்லும் பொலிஸார்.

# வடக்கு மக்களுக்கான எமது சேவை தொடரும்



(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் மூளைச்சலவை செய்து அவர்களுடைய வாக்குகளை அபகரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு வாக்களித்த மக்களிற்கு ஏமாற்றத்தை மட்டுமே இவர்களால் வழங்கங் கூடியதாக உள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

புங்குடு தீவுப்பிரதேசத்தில் இடம்பெற்ற மக்களின் தேவைகள் தொடர்பான பகுப்பாய்வு கலந்துரையாடலிலே இவ்வாறு அவர் தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில் நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் மத்தியில் பல மேடைகளில் உரத்த குரலில் ஆவேசமாக பல கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

காணி அதிகாரத்தினை பெறுவோம், இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுவோம் என்று பல ஆவேச வசனங்களை தெரிவித்தனர். ஆனால் இன்று உயர் நீதிமன்றத்தில் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இல்லை என்றும் இராணுவத்தை வெளியேற்றுவது தொடர்பான விடயங்களினை பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகாரம் உண்டு அதில் மாகாணசபை ஆதிக்கம் செலுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமிழ்தேசியக்கூட்டமைப்பினருக்கு அளித்த வாக்குகளுக்கு அர்த்தமற்றுப்போகப்போகின்றதா அல்லது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் இணக்க அரசியல் வழியில் சென்று மக்களிற்கு எதையும் பெற்றுக் கொடுக்கப்போகிறார்களா? அல்லது மக்கள் இவர்களுக்கு அளித்த வாக்குகள் அர்த்தமற்றுப் போகப்போகின்றனவா?

எமது மக்களிற்கு எவ்வா றான வகையில் மூலைச் சலவை செய்து அவர்களினை குழப்பி வாக்குகளை அபகரிக்க முடியுமோ அவ்வாறான வகையில் மக்களை மூலைச்சலவை செய்கின்றனர். நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழராயின் வீட்டிற்கும் சிங்களவராயின் வெற்றிலைக்கும் வாக்களிக்குமாறு கூறியுள்ளனர் வெற்றிலை சின்னமானது பல கட்சிகள் இணைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ணியின் சின்னமே தவிர அது தனியாக எந்தக்கட்சிக்கும் சொந்தமில்லை அரசியல் கட்சிகளின் கூட்டுட்சின்னம் என்றார்.

## புதிய பிரதி...

நிஷாந்த முத்துஹெட்டிகமவும், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சராக சரத் முத்துகு மாரனவும் பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டனர்.

பிரதமர் தி.மு.ஜயரத்ன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பல அமைச்சர்களும் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

## தனியார்...

கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் செல்வதற்கான பயணிகள் ஏற்றும் இடத்தில் அரச பேருந்து தரித்து நின்றது. அதேநேரம் தனியார் பஸ்ஸும் மேற்படி இடத்தில் நின்று பயணிகளை ஏற்றுவதற்காக வந்த போது இரு பஸ் நடத்துனர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு, அது கைகலப்பாகமாறியது.

உடனடியாக அவ்விடத்திற்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் தனியார் பஸ்களின் சேவையில் கடமையாற்றும் மூவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி - முழங்காவில் இடையிலான தனியார் பஸ்கள் தமது சேவையினை நேற்றுப் புறக்கணித்தனர்.

புறக்கணிப்பில் ஈடுபட்ட தனியார் பஸ் சேவையினர் கருத்துக்கூறும் போது,

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்ட சேவை நேரத்திற்கமைவாகவே தாங்கள் பேருந்தினை அவ்விடத்தில் தரிப்பதிற்கு வந்ததாகவும், இருந்தும் அதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவையில் ஈடுபட்டவர்கள் தம்முடன் முரண்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும், தங்களுடைய கருத்துக்களை கேட்காமல் தங்களில் மூவரை பொலிஸார் கைது செய்து கொண்டு சென்றமையினாலும், தாங்கள் சேவைப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாகவும், இதற்கு சரியான முடிவு கிடைக்கும் வரையிலும் இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடரும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அமைச்சர்கள்...

யின் மத்திய குழு ஒன்று கூடி முடிவெடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அதே வேளை தங்கள் சகோதரர் சர்வேஸ்வரனிற்கு அமைச்சு கோருவதாக வெளியிடப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த அவர் அதற்காக சர்வேஸ்வரன் தகுதிகளை கொண்டிருக்கவில்லை என அர்த்தப்படாதெனவும் தெரிவித்தார்.

தங்கள் கட்சியின் நிலைப்பாடாக முல்லைத்தீவில் தொடரும் நில ஆக்கிரமிப்பு மற்றும் குடியேற்ற திட்டங்கள் தொடர்பாக பேசுவதற்கு ஏதுவாக தமது கட்சிக்கு அமைச்சரவை வழங்கப்பட்டால் அது முல்லைத்தீவில் தெரிவானவர்களிற்கே வழங்கப்பட வேண்டுமென ஏற்கனவே சம்பந்தனிடம் தெரிவித்துள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனிடையே தமது கட்சியைச் சேர்ந்த பொன்னுத்துரை ஐங்கரநேசனுக்கு வடமாகாண சபையில் அமைச்சர் பதவி கொடுப்பதான அறிவிப்பு வெளியிலிருந்து கட்சிகளை உடைக்குமொரு தமிழரசுக்கட்சியின் சதியே எனவும் அவர் தெரிவித்தார். வடமாகாண சபை அமைச்சரவை விபரம் எனக்கூறி பட்டியலொன்று நேற்று மாலையில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதில் பொன்னுத்துரை ஐங்கரநேசன் விவசாய அமைச்சராகத் தெரிவு செய்யப்படடுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐங்கரநேசன் அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டது தமிழரசுக் கட்சியின் முடிவு மட்டுமே என்பதுடன், அது ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் சம்மதத்துடன் நடைபெறவில்லை எனவும் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக தான் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கு அவசர கடிதம் ஒன்று அனுப்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் பரிந்துரைக்கப்பபட்டு தழிரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு வடமாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பொ.ஐங்கரநேசன் என்பவர் தனிப்பட்ட முறையில் வட மாகாண சபைக்கான அமைச்சுப் பதவியைப் பெற்றதன் காரணமாகவும், தனக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இனி எவ்வித் தொடர்பும் இல்லை என்றும் இந்த அமைச்சுப் பதவியானது தமிழரசுக் கட்சியினுடைய தலைமையின் பரிந்துரையின் பேரில், முதலமைச்சரினால் தனக்குத் தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். அதுவே உண்மை யுமாகும். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமான என்னுடன் பொ.ஐங்கரநேசனுக்கு அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பாக தமிழரசுக் கட்சியோ முதலமைச்சரோ எவ்விதக் கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஒரு அமைச்சுப் பதவியை நீங்கள் வழங்க விரும்பினால் அதனை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வழங்குமாறு நான் கோரியிருந்தபோதிலும், என்னுடன் எவ்விதக் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படாமல், முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளபடி, அவருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் எதிர்காலத்தில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெளிவுபடுத்துவதுடன் அவர் கூறியது போன்றே அவருக்குக் கொடுக்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பானது தனிப்பட்ட முறையில் அவருக்கு வழங்கப்பட்டதென்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து ஆறு ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஈழமக்கள் புரட்சிகர. விடுதலை முன்னணிக்கு எந்த விதமான அமைச்சுப் பதவியும் வழங்கப்ப டவில்லை என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எதிர்காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஓர் அமைச்சுப் பதவியை வழங்கியதாக தவறானதும், பொய்யானதுமான பரப்புரைகளைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்வதுடன் செய்யமாட்டீர்கள் என்றும் நம்புகின்றேன் என்றும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## தெரிவு நடந்தது...

மூலம் தெளிவுபடுத்தினர்.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு,

போருக்குப் பின்னரான சூழலை கருத்திற் கொண்டு உறுப்பினர்களின் தகைமைகள், அனுபவங்கள், நிபுணத்து வங்கள், விருப்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் வடமாகாண சபைக்கான அமைச்சுத் தேர்வு இடம்பெற்றுள்ளது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வடமாகாண சபைக்கான அமைச்சரவை தெரிவு தொடர்பில் விளக்கமளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது உறுப்பினர்களிடம் இருந்து அவர்களின் தகைமைகள், அனுபவங்கள், விருப்பங்கள் சம்பந்தமாக தரவுகளைப் பெறக் காலதாமதம் ஆகிவிட்டதால் எமது அமைச்சர்களையும் அமைச்சுக்களையும் அடையாளம் காணவும் தாமதம் ஏற்பட்டுள்ளது. அப்படியிருந்தும் ஒருவரின் தரவுகள் இன்னும்கூட கிடைத்தபாடில்லை.

எமது கூட்டமைப்பின் மூன்று கட்சிகள் தமது அமைச்சர் விருப்புகளைத் தெரிவித்திருந்தன. எனினும் சகல உறுப்பினர்களும் ஒரேமாதிரியான தேர்வுக்கே உட்படுத்தப்பட்டனர்.

போருக்குப் பின்னரான சூழலைக் கருத்திற்கொண்டு உறுப்பினர்களின் தகைமைகள், அனுபவங்கள், நிபுணத்துவங்கள், விருப்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு நடைபெற்றுள்ளது.

ஆட்சித்திறனுக்கு அடிகோலுபவை தகைமையும் திறமையும் ஆவன. எமது மக்களின் நம்பிக்கையை நடைமுறைப்படுத்தும் வண்ணம் இவற்றையே அத்திவாரமாகக் கொண்டு தேர்வு நடைபெற்றுள்ளது.

எதிர்க்கட்சியாக இதுவரை இருந்து தற்போது ஆட்சியில் ஈடுபட அவகாசம் அளிக்கப்பட்டுள்ள நாம் எமது நோக்குகளில் அடிப்படை வித்தியாசத்தைக் காட்டவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கின்றோம். அத்துடன் மக்கள் எமக்களித்த ஆணையை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டையும் கொண்டுள்ளோம்.

எனினும், குறிப்பிட்ட அளவு அமைச்சர்களையே சட்டப்படி நாங்கள் நியமிக்க வேண்டியிருந்தது. பலருக்குத் தகைமையிருந்தும் சிலருக்கே அமைச்சுப் பதவிகள் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் பிரதேச பிரதிநிதித்துவம், கட்சியடிப்படை, நிர்வாகப் பொறுப்புக்களின் அந்நியோன்யம் ஆகியனவும் கருத்தில் எடுக்கப்பட்டன.

மக்களின் ஆதரவைப்பெற்ற கட்சிகளுக்கு உரிய முன்னுரிமையும் அளிக்கப்பட்டது. இவ்வாறான அடிப்படையிலேயே அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அதேநேரம் எந்த ஒரு உறுப்பினருக்கு குறிப்பிட்ட அமைச்சுத்துறை சார் பொறுப்புக்கள் கொடுக்கப்படாமல் விடுபடவும் இல்லை.

அவர்கள் அந்தந்த அமைச்சின் குறிப்பிட்ட துறைசார் பொறுப்புக்களை ஏற்று அமைச்சர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுவார்கள். விடுபட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் அந்தந்த அமைச்சர்களால் நேரடியாகவே கண்காணிக்கப்படுவன. குறிப்பிட்ட பொறுப்புக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சில பொது ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டே செயலாற்ற வேண்டியிருக்கும்.

அவையாவன,

1. காலத்திற்குக் காலம் பொறுப்புள்ள தலைமை அலுவலருடன் சேர்ந்து குறிப்பிட்ட அமைச்சின் ஊடாக ஆற்றப்படும் காரியங்கள் அனைத்தையும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

2. அதேபோல் அந்தந்த அமைச்சரினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் நன்மை தீமைகள், பயன்கள், விளைவுகள் ஆகியன தொடர்ந்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

3. இரு மாதங்களுக்கு ஒரு முறை அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் தமது கருத்துக்களை மேற்படி உறுப்பினர்கள் எழுத்து மூலம் தெரியப்படுத்தி வரவேண்டும்.

இவற்றை விட சில நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டி இருக்கும். அவை பின்னர் அறிவிக்கப்படும்.

அமைச்சர்கள், அமைச்சுக்கள், பொறுப்பான விடயங்கள், பொறுப்பானவர்கள் போன்ற விபரங்கள் பின்வருமாறு,

சபையின் தவிசாளர் - சீ.வீ.கே.சிவஞானம் (இ.த.அ.கட்சி யாழ்)

சபையின் பிரதி தவிசாளர் - அன்ரன் ஜெயநாதன் (இ.த.அ.கட்சி முல்லைத்தீவு)

முதலமைச்சர் - நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் (பொது வேட்பாளர் யாழ்)

வேளாண்மை, கால்நடை, நீர்ப்பாசனம், சூழல் அமைச்சர் - பி.ஐங்கரநேசன் (ஈ.பீ.ஆர்.எல்.எப் யாழ்)

கல்வி, கலாசார, அமைச்சர் - தி.குருகுலராஜா (இ.த.அ.கட்சி கிளிநொச்சி)

சுகாதார அமைச்சர் - வைத்திய கலாநிதி .பி.சத்தியலிங்கம் (இ.த.அ.கட்சி வவுனியா)

மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் - டெனீஸ்வரன் (ரெலோ மன்னார்)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாவிடினும். பிரதித் தவிசாளர் பதவியிலிருக்கும் அன்ரன் ஜெயநாதனுக்கு முக்கியமான துறைப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அயுப் அஸ்மீனுக்கும் அப்பொறுப்புக்களில் குறிப்பிட்ட விடயங்களில் பங்கேற்க வழிவகுக்கப் பட்டுள்ளது. இவர்கள் முதல மைச்சருடன் சேர்ந்து கடமையாற்றுவார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பது கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சுப் பதவிகள் மீள்பரிசீலனை செய்யப்படும் போது முல்லைத் தீவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதானது முன்னுரிமைபெறும்.

வடமாகாணசபை மற்றைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பது எமது விருப்பம். இனியாவது கட்சி பேதங்களை மறந்து, வன்முறைகளைக் களைந்து, ஜனநாயக அடிப்படையில் பாதிப்புற்றிருக்கும் எம் மக்களின் இடர் களையப் பாடுபடுவோமாக என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# துரத்துகிறது கடன் தொல்லை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த சசிலியாமா கிரேட் என்பவர், கடன்தொல்லை காரணமாக இரண்டு பேரக் குழந்தைகளை தன்னுடன் அழைத்துக் கொண்டு தமிழ் நாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

சசிலியாமா கிரேட்டின் மகள் மற்றும் மருமகன் ஆகிய இரண்டு பேரும், வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த ஒருவரிடம் இருந்து கடனாக பணம் பெற்றுள்ளனர். பின்னர் அவர்கள் கடனை திரும்பி கொடுக்க முடியாமல் அங்கிருந்த தாயிடம் இரண்டு குழந்தைகளையும் கொடுத்துவிட்டு வேறு இடத்திற்கு சென்று விட்டதாக கூறப்படுகின்றது. இதனால் கடன் கொடுத்தவர்கள் சசிலியாமா கிரேட்டிடம் தொடர்ந்து கடனை கேட்டு மிரட்டியுள்ளதாகத் தெரிகிறது. அச்சமடைநத சசிலியாமா கிரேட் தனது மகளின் குழந்தைகளான ஜாக்கி, ஜெக்சன் ஆகிய இரண்டு பேருடனும், தலைமன்னாரில் இருந்து கடந்த வியாழக் கிழமை காலை 6 மணிக்கு, அங்குள்ள பிளாஸ்டிக் படகை வாடகைக்குப் பெற்றுள்ளார்.

படகோட்டிகள் அவரிடம் 15 ஆயிரம் ரூபா பணம் பெற்றுக் கொண்டு, தனுஸ்கோடி அரிச்சமுனைக்கு வந்து அவர்களை இறக்கி விட்டு சென்றுள்ளனர். தகவல் கிடைத்த இந்திய கடலோர காவல் படை குழும பொலிஸ் உதவி ஆய்வாளர் ஜோதிபாஸ் மற்றும் பொலிஸார் சென்று இலங்கை பெண் மற்றும் இரண்டு குழந்தைகள் என மூன்று பேரையும் அழைத்து வந்தனர். அவர்களிடம் பொலிஸார் மற்றும் க்யூ பிரிவு பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

# மக்கள் நலன்சார்ந்த சேவைகளுக்கு என்றும் எமது ஆதரவு உண்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சராக நியமனம் பெற்றுள்ள கௌரவ சி.வி.விக்னேஸ்வரனுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், மாகாண சபை முறைமையை ஏற்று அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு அவர் முன்வந்திருப்பதையும் பாராட்டுகின்றேன் என்று வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாகாண சபை முறைமையை ஒழுங்குற செயற்படுத்துவதன் ஊடாக, அதனை ஓர் ஆரம்பமாகக் கொண்டு, தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கான தீர்வை எட்ட வேண்டும் என்பதை நாம் கடந்த பல வருட காலமாக கூறிவந்திருக்கின்றோம். இதனை இவர்கள் காலங்கடந்தாவது இன்று ஏற்றுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

அந்த வகையில், நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் மீறாத வகையில் மாகாண சபை நிர்வாகத்தை முன்னெடுத்து, எமது மக்களின் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் முன்வர வேண்டும். இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் என்ற வகையில் நான் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவேன். தவிர, எதிர்க் கட்சி என்ற வகையில் வெறுமனே எதிர்ப்புக் கட்சியாக நாம் இருந்துவிடப் போவதில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, எமது பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை சார்ந்த பிரச்சினைகள் பல தீர்க்கப்பட வேண்டியுள்ளன. அது மட்டுமல்லாது, இந்திய கடற்றொழிலாளர்களால் எமது கடற்றொழிலாளர்கள் அன்றாடம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். விவசாயிகளின் பிரச்சினைகள், கணவர்மாரை இழந்த பெண்களுக்கான சுய தொழில் வாய்ப்புக்கள், வீதிகள் மற்றும் பாடசாலைகள் அபிவிருத்தி செயற்பாடுகள், தொழில் வாய்ப்புக்கள் உட்பட பல்வேறு துறை சார்ந்து நாங்கள் மேலும் துரித நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளன.

இதனை எல்லாம் கருத்தில் கொண்டு முதலமைச்சர் தலைமையிலான மாகாண நிர்வாகம் ஒழுங்குற செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் எமது மக்கள் சார்பாக நான் முன் வைக்க விரும்புகின்றேன்.

ஒரே நாட்டுக்குள் அரசுடன் இணைந்து செயற்படத் தான் தயாராக இருப்பதாக முதலமைச்சர் கூறி வருவதில் இருந்து அவர், எமது நலன சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க இணைந்து செயற்படுவார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

எனவே, எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து, குறுகிய அரசியல் பேதங்களை மறந்து, மக்கள் நலன் சார்ந்து செயற்பட எம்மாலான அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் மாகாண சபை அரசுக்கு நாம் வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சச்சின் கிரிக்கெட்டில் ஓய்வு



200ஆவது டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபைக்கு எழுதிய கடிதத்தில் அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளார். 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் இடம் பிடித்த சச்சின், 24 ஆண்டுகள் இந்திய அணிக்கு விளையாடியுள்ளார்.

கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றார். தற்போது சச்சின் டெஸ்ட் போட்டியில் மட்டுமே விளையாடி வருகிறார். 198 டெஸ்டில் ஆடியுள்ள சச்சின், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக மோதும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறவுள்ளார்.

இப்போட்டிகள் கொல்கத்தா (ஈடன் கார்டன்), மும்பை (வான்கடே) ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன. இதில் எந்த இடத்தில் 200 ஆவது டெஸ்ட் என இன்னும் முடிவாகவில்லை. என்றாலும், அட்டவணைப்படி, 2 ஆவது டெஸ்ட் போட்டி நவம்பர் 14 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அத்துடன் டெஸ்ட் அரங்கில் 200 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள முதல் வீரர் என்ற சிறப்பையும் சச்சின் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

இது வரை 198 டெஸ்ட் போட்டியில் விளையாடிய சச்சின் 15,837 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதில் 51 சதமும், 67 அரை சதமும் அடங்கும்.

ஓய்வு பெறுவது குறித்து இந்திய கிரிக்கெட் சபைக்கு சச்சின் எழுதிய கடிதத்தில்,

இந்தியாவுக்காக கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று என் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டேன். அந்தக் கனவுடன் நான் கடந்த 24 ஆண்டுகளாக வாழ்ந்து வந்தேன். நான் 11 வயதில் இருந்து கிரிக்கெட் விளையாடி வருகிறேன். அதனால் இனி கிரிக்கெட் விளையாடாமல் இருக்கும் ஒரு வாழ்க்கையை நினைக்கவே கடினமாக உள்ளது. சொந்த மண்ணில் 200 ஆவது டெஸ்ட் போட்டியை விளையாட ஆவலாக உள்ளேன்.

அந்தப் போட்டியோடு நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## கணனிமயமாகிறது கிளி.முல்லை பதிவாளர் திணைக்களம்

முல்லைத்தீவு , கிளிநொச்சி மாவட்டங்களில் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் செயற்பாடுகள் கணனி வலைப்பின்னலுடன் இணைக்கும் செயற்பாடுகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதற்காக பதிவாளர் நாயகம் E.M. குணசேகரா இன்று காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கு வருகை தருகிறார். அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் நண்பகல் 12 மணிக்கு அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தலைமையிலான நிகழ்வில் கணனி வலைப் பின்னல் அங்குரார்ப்பணத்தைச் செயவுள்ளார். (90)

## பொருளாதார புள்ளிவிபரம் திரட்டல்

(யாழ்.நிருபர்)

இலங்கைப் புள்ளிவிபரத் திணைக்களம் பொருளாதாரப் புள்ளி விபரங்களைச் சேகரிக்கம் வேலைத்திட்டத்தினை அடுத்தமாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

ஏற்கனவே நடந்துமுடிந்த குடிசன மதிப்பீட்டைத் தொடர்ந்து பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் சேகரிக்கும் பணிகள் மேற் கொள்ளப்படுவது வழமையாகும்.

முதற்கட்டமாக இலங்கைப் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் புள்ளிவிபரப் பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் கொழும்பில் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில் மாவட்டங்களில் குறிப்பாக கைத்தெழில்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்கள் என்பன பற்றிய புள்ளிவிபரங்கள் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் ரீதியாக சேகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# மத்திய கல்லூரி நாடக அணி தேசிய ரீதியில் மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல்கல்லூரி தமிழ்நாடகமன்றம் நடாத்திய அகில இலங்கைப்பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக அணி தேசிய ரீதியில் மூன்றாமிடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது.

கொழும்பு றோயல்கல்லூரியின் நாடக மன்றத்தினால் அகில இலங்கைப்பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற நாடகப்போட்டியில் இவ்வாண்டுக்கான தேசியமட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 'விடியலின் பாதை' நாடகம் வெற்றி பெற்றுக் கொண்டுள்ளதுடன் சிறந்த துணை நடிகனுக்கான தேசிய விருதினையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

சிறந்த துணை நடிகராக பிரவீண் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நாடகத்திற்கான நெறியாள்கை வழிப்படுத்தலை மத்திய கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் குமரன் வழங்கியுள்ளார்.

## வைரவர் கோயில் தீக்கிரை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குளக்கட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள ஞான வைரவர் கோயில் நேற்று முன்தினம் இரவு விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் பழமை வாய்ந்த கோயிலாகும். போருக்கு பின்னர் பலத்த சேதம் அடைந்த இக்கோயில் புனரமைக்கப் படாமல் தற்காலிகக் கொட்டகையிலேயே வழிபாடு நடாத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# தன்னியக்க இயந்திர சேவை வழங்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பளைப்பிரதேசத்தில் செயற்பட்டு வருகின்ற அரச வங்கிகளில் தன்னியக்க பணம் பெறும் இயந்திர சேவையினைப் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பளைப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரண்டு வங்கிகள் இயங்கி வருகின்றன. இந்தப் பகுதியில் 18 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அரச அலுவலகங்களில் கடமையாற்றுவோர் கடமை நேரங்களில் வங்கிகளிற்குச் சென்று பணம் பெறுவதில் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேபோல் அவசர தேவைகளிற்கு இந்தப் பகுதியில் உள்ள மக்கள் தன்னியக்க பணம்பெறும் இயந்திரம் மூலம் பணம் பெறுவதற்கு 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சாவகச்சேரிக்கும் 25 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிளிநொச்சிக்கும் செல்லவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, பொதுமக்களின் நன்மை கருதி பளைப் பகுதியில் இயங்கும் அரச வங்கிகளில் தன்னியக்க பணம்பெறும் இயந்திரத்தைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.